தொழில்

இந்த இதழில்

பக்கம்

நாம் ... 2

தலையங்கம் :

ஒத்திப் போடுங்கள் ... 3

வெற்றிக்கு வித்து ... 3

கவிதைகள் :

தொழிலாளருக்கு...? ... 5

அழகுத் தெய்வம் ... 26

கட்டுரைகள் :

நாகரி லிபியில் தமிழ் கல்வெட்டுகள் ... 6

புற்று நோய் ஆராய்ச்சி ... 16

குடும்பக் கட்டுப்பாடு ... 17

மின்சார கைக் கடிகாரம் ... 18

அறிமுகம் :

குடி - நீர் மட்கலங்கள் ... 7

முன்னுக்கு வருபவர் ... 8

தொடர்கதை : இணைந்த உள்ளங்கள் ... 9

சிறுதொழில் செய்-முறை : பன்னீர் ... 15

கதை: மனக்க தவும் திறந்தது ! ... 21

ராசிபலன் ... 25

சினிமா : அன்னையின் ஆணை ... 28

லக்ஷிமி பிராண்டு

ஸ்டீல் டிரங்க் ஒர்க்ஸ்

திருச்சி-2.

Prop. T. P. வேலுப்பிள்ளை

குறிப்பு:—கேஷ் பாக்ஸ், ஆபீஸ் தபால் பாக்ஸ்,

கம்பைனேடிரே, ஜுவல் கேஸ் இவைகள் உயர்ந்த முறை

ஸ்டீலில் கிடைக்கும்.

நாம்

"தொழில்" பிறந்து மூன்று திங்களுக்குள் அதன் வளர்ச்சி மகத்தானது. இது நாங்கள் எதிர்பார்க்காதது. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் அது வளர்ந்தோங்குவதற்கு காரணம் வாசகர்கள், விளம்பரதார்கள், எழுத்தாளர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் முதலியோர் நல்கிய ஆதரவும், ஒத்துழைப்பும் தாம் என்று கூறுவோம்; இது முற்றும் உண்மை. தமிழ் கூறும் நல்லுலகுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

தாள் விலை 'விஷம்போல' ஏறிவரும் இந்நாளில் நாங்கள் எண்ணியபடி பல புதுப் புது அம்சங்களைப் புகுத்த முடியாது போயிற்று. எனினும் ஏற்கனவே இடம் பெற்றுள்ள அம்சங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளமை எங்களுக்குப் பெரும் மகிழ்வுதருகிறது.

"தொழில்" இந்த இதழிலிருந்து பயனுள்ள ஒரு புதிய பகுதியைத் தொடங்குகிறது. ஒவ்வொரு இதழிலும் ஒரு 'சிறு தொழில் செய்முறை' பற்றிய கட்டுரை வெளிவரும். அனுபவமுள்ளவர்கள் எழுதுகிறார்கள். மங்கலத்தைக் குறிக்கும் பன்னீர் செய்யும் முறை இந்த இதழில் வெளியாகியுள்ளது. நிச்சயமாக இந்தப் புதிய பகுதி மக்களுக்கு நன்மை பயக்கும் என்று நம்புகிறோம். நாட்டில் வேலை யின்மைத் தொல்லை குறைய இப்பகுதி உதவும். சொற்ப மூலதனத்துடன் ஒரு தொழில் தொடங்கிநடத்த விரும்புகிறவர்களுக்கு இது நல்லதோர் வாய்ப்பு.

எல்லா முக்கிய ஊர்களிலும் "தொழில்" கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். எனினும் சில இடங்களில் "தொழில்" கிடைப்பதில்லை என்று எழுதுகிறார்கள். அவர்களுக்கு நாங்கள் கூறும் யோசனை, அவர்கள் சந்தாதார்களாக ஆகிவிடவேண்டும் என்பதுதான். சந்தாதார்களுக்கு தபால் மூலம் "தொழில்" ஒழுங்காக அனுப்பிவைக்கப் பெறுகின்றது.

மத்திய, மாநில அரசாங்கங்களிடம் "தொழில்" நன்மதிப்பு பெற்று வருவது குறித்தும் பெருமை அடைகிறோம். மட்பாண்டத் தொழில் செய்யும் மக்களுக்குஒரு குடியிருப்பு வேண்டுமென்று முன்பு எழுதியிருந்தோம். அதன் பேரில் மத்திய அரசாங்கத்தார் மாநில அரசாங்கம் மூலம் பல தகவல்கள் கேட்டிருக்கின்றனர். வேண்டுவன செய்வது எங்கள் கடமை: எனினும் இந்தக்குடியிருப்புத் திட்டம் விரைவில் உருவாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மட்பாண்டத் தொழில் கூட்டுறவு சங்கங்களும் பிறரும் உறுதுணையாக விளங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

"தொழில்" வெளியிடும் சினிமாப் படக்கருத்துரைகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சினிமாப் பகுதியை விரிவாக்கவேண்டுமென்று வாசகர்கள் எழுதுகிறார்கள். விரைவில் விரிவுபடுத்தவேண்டுமென்பது தான் எங்கள் விருப்பம். தாள் தட்டுப்பாடு தடையாக இருக்கிறது! எனினும் செப்டம்பர் திங்கள் முதல் சினிமாப் பகுதி விரிவாக்கப்படும்; மற்ற இன்கலைகளும் இடம் பெறும் என்று திடமாக நம்புகிறோம். அதுவரையில் பொறுக்க!

"தொழில்" நாட்டுக்குச் சிறந்த முறையில் பணி புரிவதற்கு அவ்வப்போது அரிய யோசனைகள் கூறிவரும் வாசகப் பெருமக்களுக்கு எமது நன்றி; உண்மையில் வாசகர்களின் கருத்துக்கள் தாம் "தொழில்" ஆசிரியர் குழுவினருக்கு உற்சாக மூட்டும் அருமருந்து—அதாவது 'டானிக்'! எனவே யாரும் தாராளமாகத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். வணக்கம்!

வார்ப்படங்கள், பற்றவைப்புக்களை பரிசீலிக்க சாதனங்கள்

வார்ப்பட ரீதியாகவும், பற்றவைப்பு ரீதியாகவும் பொருத்திச் சேர்க்கப்பட்ட கட்டுமானங்களிலும், மூல சாதனங்களிலும் ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா என்று பரிசோதித்துப் பார்ப்பதற்கு, கட்டுமானத்தைச் சிர்குலைக்காமல் எக்ஸ்-ரே, அல்ட்ராசோனிக்ஸ், கம்மா-ரே ஆகிய நவீன கதிர் பிரயோக முறைகள் மூலம் பரிசோதனை செய்வதற்குக் கல்கத்தா அலிப்பூரில் உள்ள சர்க்கார் பரிசோதனைக் கூட வசதிகளை விஸ்தரிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தலத்திலேயே பரிசோதனை செய்வதற்காக கையில் எடுத்துச் செல்லக்கூடிய இரண்டு எக்ஸ்-ரே யந்திரங்கள் கூடிய சீக்கிரம் வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—8—58	இதழ் 7

ஒத்திப் போடுங்கள்!

நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளில் தசாம்ச (Metric) முறையைப் புகுத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர், அரசாங்கத்தார். சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வரும் அக்டோபர் முதல் தேதியிலிருந்து சோதனை முறையாக தசாம்ச முறை நடைமுறையில் கொண்டு வரப்படும். எடுத்த எடுப்பில் இந்த தசாம்ச முறை கட்டாயம் அல்ல என்பதும், கூடவே தற்போது நடைமுறையிலுள்ள நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளும் இருந்து வரும் என்பதும் உண்மையே. எந்த ஒரு சீர்திருத்தமும் மக்களின் எதிர்ப்பு இன்றி, விரும்பிபலன் அளிக்க வேண்டுமானல் அது நடை முறைக்குக் கொண்டு வரப்படும் காலம் அனுகூலமாக இருக்கவேண்டும் என்பதை மறுக்க முடியாது. 'சீர்திருத்தம் எதற்குமே எதிர்ப்பு இருக்கத்தான் இருக்கும்; எனவே காத்திருப்பதில் பலனில்லை' என்று வாதிப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூற்று சமூகச் சீர்திருத்தங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சரியாக இருக்கலாம். ஆனல் பொருளாதார, வாணிபத் துறைகளில் புதிய முறைகளைப் புகுத்தும்போது நிதானமும், சம்பந்தப்பட்ட மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் இன்றியமையாதவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

புதுக்காசு (நயாபைசா) நடைமுறைக்கு வந்ததனல் ஏற்பட்ட தொல்லைகள் ஒரு வழியாக இப்போது தான் அடங்கி வருகின்றன. புதுக்காசு வந்ததால் வாழ்க்கைச் செலவு கணிசமாக அதிகரித்துள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மை. தவிர, புது நாணயங்கள் அச்சடித்தல், அதிகாரிகள் நியமித்தல் மக்களிடையே அம்முறையைப் பரப்புதல் முதலிய காரியங்களுக்காக அரசாங்கத்துக்கு வேறு பல கோடி ரூபாய்கள் செலவு. புதுக்காசு ஏற்கனவே புழக்கத்துக்கு வந்துவிட்டபடியால் அது பற்றி நாம்சொல்லக்கூடியதெல்லாம், விரைவில்பழைய நாணயங்கள் புழக்கத்திலிருந்து விலக்கப்பட வேண்டுமென்பது தான். அப்பொழுது தான் மக்கள் அடைந்துவரும் நஷ்டம்குறையும்.

இனி நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளில் தசாம்சமுறை வருவதால்

வெற்றிக்கு வித்து!

மீண்ட தமிழகத்தின்—குமரிக் கோட்டத்தின் பிரதிநிதியாக மாநில அமைச்சர் குழுவில் திருமதி லூர்து அம்மாள் சைமன் அவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். உள்ளூர் ஆட்சி மன்றங்களின் வளர்ச்சி அவர்களது பொறுப்பு. அமைச்சர் குழுவில் திறமையுடன் பணி புரியும் சில அமைச்சர்களில் திருமதி லூர்து அம்மாளும் இடம்பெற்றுவிட்டார் என்பது மக்களது ஒரு முகமான பாராட்டு.

அண்மையில் தூத்துக்குடியில் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில் திரு. சாமுவேல் வெற்றி பெற்றமை குறித்து "தொழில்" மகிழ்ச்சி யடைகிறது. உண்மை ஊழியரும், ஒழுக்க சீலருமான திரு. சாமுவேல் வெற்றி பாட்டாளிகள் குலத்தின் வெற்றியாகும். நாட்டு விடுதலைக்கும் பாட்டாளிகள் நலனுக்கும் உழைத்துழைத்து தழும்புகள் பெற்ற திருமேனியார், ஸ்ரீதிரு. சாமுவேல். அவரது வெற்றிக்கான பெருமையில் பெரும் பகுதியும் திருமதி லூர்து அம்மாளையே சாரும். அவ்வம்மையாரின் திருவுருவப்படம் "தொழில்" முகப்பை அலங்கரிக்கிறது.

வாழ்க்கைச் செலவு எவ்வளவு உயருமென்று தெரியவில்லை. செலவு ஒரு புறமிருக்க மக்களுக்கும், வணிகர்களுக்குமிடையே சச்சரவுகள், அடிதடிகள் வேறு நடக்கும்!

எந்த ஒரு சீர்திருத்தமும் நடைமுறைக்கு வருவதற்கு நிலையான நல்லாட்சி நாட்டில் இருக்கவேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது. ஒரு சீர்திருத்தம் வருவதனால் நிலையான ஆட்சிக்கு இடையூறு ஏற்படுவதும் சாத்தியமே என்பதையும் பதவியிலுள்ளவர்கள் மறந்து விடக்கூடாது. பதவியிலுள்ளவர்கள் செய்யும் செயல்களில் எல்லாம் பழுது சொல்லும் பெரும் வாய்ப்பு எப்போதுமே எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

144852

வருவாய் உயராமல் வாழ்க்கைச் செலவு மட்டும் உயர்ந்து அல்லல்படும் மக்களுக்கும், பலவிதச் சட்டதிட்டங்களாலும், விதி முறைகளாலும் தொல்லைப்படும் வணிக சமூகத்துக்கும் புதிய முகத்தல், நிறுத்தல், நீட்டல் அளவைகள் வேண்டா வெறுப்பையே கொடுக்கும். நாட்டில் வளமை கொழித்து, மக்கள் சுபிட்சமாக வாழும் காலத்தில் சீர்திருத்தங்கள் வருமானால் அவற்றை மகிழ்வுடன் ஏற்று நடத்த அவர்கள் தாமாகவே முன்வருவார்கள். நிலையான சுபிட்சமும், மகிழ்ச்சியும் நாட்டில் உதிக்க இன்னும் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வர இருக்கின்றன. அந்நியச் செலாவணிமுடை, இறக்குமதிகள் குறைப்பு, விலைவாசி உயர்வு முதலியவற்றால் மக்களிடையே ஏற்கனவே ஐந்தாண்டுத்திட்டங்களுக்கு எதிரான மனப்பான்மை வலுத்து வருகிறது. போதாக்குறைக்கு, கெஜத்துக்குப் பதில் மீட்டர், மணுவுக்குப்பதில் 'குயின்டால்', சேர் அல்லது ராத்தலுக்குப்பதில் 'கிலோகிராம்' என்றெல்லாம் தசாம்ச முறைகள் புகுத்தப்படுமானால் மக்களிடையே வெறுப்பு வலுப்படும். நிலையான நல்லாட்சியில் நாட்டமுடையவர்கள் முகத்தல், நிறுத்தல், நீட்டல் அளவைகளில் தசாம்சமுறை வருவதைஒத்திப்போடுவது நல்லதுமட்டுமல்ல; விவேகம் நிறைந்த செயலுமாகும். என்று ஒப்புக்கொள்வர்.

மூன்றாவது, நாலாவது ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது புதுமுறையைப் புகுத்தலாம். "ஏற்கனவே ஏற்பாடுகள் எல்லாம் நடந்து விட்டனவே; அதிகாரிகளையெல்லாம் நியமித்து விட்டோமே" என்று அரசாங்கத் தரப்பில் பதில் வரலாம். ஒருவழி கூறுகிறோம்; புதிய தசாம்ச முறைகளை மொத்த வியாபாரத்துக்கு மட்டிலும் இப்போது வைத்துக் கொள்ளுங்கள். அவற்றால் ஏற்படும் நன்மைகளை வணிகர்களும், தொழில் அதிபர்களும்கண்டறிந்தால் நிச்சயம் தாமாகவே சில்லறை வியாபாரம் உள்பட மற்றத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்துவர் என்பதில் ஐயமில்லை.

ஃ ஃ ஃ

"தொழில்" முந்திய இதழ்கள் தீர்ந்து விட்டன; தயவு செய்து கேட்டு எழுத வேண்டாம்! —ஆசிரியர்.

எழுதி அனுப்புங்கள்!

வர்த்தகம், பல வேறு தொழில்கள் பற்றிய கட்டுரைகளை "தொழில்" வரவேற்கிறது. வர்த்தக சபைகள், தொழில் சங்கங்களின் கூட்டங்கள், மகாநாடுகள், தீர்மானங்கள் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பினால் வெளியிடுவோம். முடிந்த வரையில் தமிழிலேயே செய்திகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல், இலக்கியம், கலை பற்றிய கட்டுரைகளும், புகைப் படங்களும் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள், கதைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றையும் மகிழ்ச்சியுடன், "தொழில்" வெளியிடும்.

எழுதி அனுப்புங்கள்; பிரசுரிக்கிறோம்!

தொழிலாளருக்கு......?

த. சிகாமணி

1. "படுபள்ளம் மணல்மேடு எங்கள் நாடு!
சுடுகாடும் இடுகாடும் எங்கள் வீடு!
கடுங்கோடை குளிர்வாடை எங்கள் காட்சி!
கடுவாயும் கானுறும் அதற்குச் சாட்சி!
கொடுவாதம் குக்கிருமல் எங்கள் சொத்து!
குவலயத்தில் யாருள்ளார் இதனை யொத்து
தடுமாறி நாம் சொன்னல் தன்மை யோடு
தயங்காது முன்வந்து கேட்பார் இல்லை!"

* * * *

2. என்றென்று சொல்லிவிட்டால் ஏற்ற முண்டா!
எண்ணித்தான் அழுதாலும் மாற்ற முண்டா!
கண்ணென்றும் பொன்னென்றும் போற்றுங் கல்வி
மண்ணென்று மதித்துவிட்டீர்; மார்க்க மற்றீர்!
பண்ணொத்த பைந்தமிழ் படித்த துண்டா?
பார்புகழும் பனுவல்களைப் பார்த்த துண்டா?
விண்ணோக்கி நிற்கின்றீர் அன்றும் இன்றும்
வீண் பழிகள் ஏற்றலின்றி என்ன கண்டீர்?

* * * *

3. 'பிணியென்று' பிதற்றுகின்ருர் மாற்ருர் நம்மை!
தனித்தனியாய் இருக்காதீர்; ஒன்ருய்ச் சேர்வீர்
பணிவோடு பார்க்கின்றேன் அருமைத் தோழா!
இனியேனும் என் இன்சொல் ஏற்று நீவீர்
அணியணியாய் ஆர்த்தெழுந்து கல்வி கற்பீர்!
மணிமணியாய் படித்திடுவீர் மானங் காக்க
கனிவோடு பிறர்மொழியும் கேள்வி எல்லாம்
கவினுறவே ஏற்றிடுவீர் கடுகிச் சென்று!

* * * *

4. கூடிடுங்கள் இன்றுமுதல் ஒன்ருய் நீங்கள்
கூட்டுமுறை பின்பற்றி தொழில்கள் செய்ய!
நாடிடுங்கள் நம்மரசை உதவி கேட்க
நாலாறு தொழில்பரப்பி நன்மை காண்பீர்!
ஓடிடுங்கள் தொழில்வல்லார் உறவு தேடி
ஆடிடுங்கள் அருந்தொழில்கள் பயின்ற பின்னர்!
தேடிடுங்கள் தொழில்வளத்தால் கோடிச் செல்வம்
பாடிடுங்கள் தொழில்முறையால் வெற்றி என்றே!

★ நாகரி லிபியில் தமிழ் கல்வெட்டுக்கள் ★

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் உட்சுவரில் பார்க்கலாம்

தொல் பொருள் ஆராய்ச்சி இலாகா சமீப காலத்தில் நடத்திய சிலாசாசன-செப்புப் பட்டய ஆராய்ச்சிகளின் போது தேவநாகரி லிபியில் எழுதப்பட்டுள்ள தமிழ் கல்வெட்டொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

சேகரிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் மிகப் புராதனமானவை திருப்பரங்குன்றம் மலைக் குகைகளில் பிராமி லிபியில் எழுதப்பட்டிருப்பவையாகும். மூல ஸ்தான நிலைக் கம்பத்தில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டில் அந்த மலை "பரம சிகரின்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தமிழ்ப் பெயரான திருப்பரங்குன்றம் என்பதன் சமஸ்கிருத மொழிபெயர்ப்பு என்பது வெளிப்படை.

ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதர் ஆலய உட்சுவர்களில் விஜய நகர வமிசத்தைச் சேர்ந்த அச்சுதராயர் காலத்திய (கி. பி. 1534-சகம் 1456) கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. தமிழ் மொழியிலுள்ள அக்கல்வெட்டு நாகரி லிபியில் எழுதப்பட்டிருப்பது தான் அதன் பிரதான விசேஷம். தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைகளில் உள்ள கோயில் கல்வெட்டுக்களுக்கு நாகரி லிபி உபயோகிக்கப்படுவது சகஜம் தான். ஆனால், தமிழில் அப்படி அல்ல,

சென்னை ராஜ்யத்திலிருந்து கிடைத்த உடைந்து போன சிலாசாசனம் ஒன்றில் சோழர் காலத்திய சட்ட விதி முறை ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; அது சகஜமாகக் காணப்படாத ஒரு முறையாகும். அதில், கணக்குத் தீர்க்காமல் குறிப்பிட்ட ஒரு தொகையைப் பாக்கியாக வைத்திருந்த ஒருவருக்குச் சிறை தண்டனை அளிக்கப்படுவது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

தொழில்

விடுதலைத் திருநாள் சிறப்பு இதழ்

ஆகஸ்டு 15-ந்தேதி வெளிவரும்

சிறப்புக் கட்டுரைகள், கதை, கவிதை, படங்கள் முதலியன இடம் பெறும்

அதிகப் பக்கங்கள்! ஆனல் அதே விலை தான்!!

உங்கள் பிரதிக்கு உங்களூரிலுள்ள எங்கள் பிரதிநிதிகளிடம் முன்கூட்டியே தெரிவித்துவிடுங்கள் அல்லது எங்களுக்கு எழுதுங்கள்!

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பினைப் பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பண்டங்கள் மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம். "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை," என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

★

குடி - நீர் மட்கலங்கள்

குளிர்ந்த குடி-தண்ணீர் உடலுக்கும், உள்ளத்துக்கும் இனிமை பயப்பது. கோடையில் குளிர்நீர் வேண்டுமென்றால் 'ஐஸ்-வாட்டர்' அருந்துகிறோம்; மற்றக் குளிர்பானங்கள் குடிக்கிறோம். ஆனால் இவற்றிற்கெல்லாம் விலை கொடுத்தாக வேண்டும்! குடி-நீருக்குக்கூட விலையா என்று கேட்காதீர்கள்!

ஏழை நாட்டில் எல்லோரும் பனிக் கட்டி கலந்த பானங்கள் பருக முடியாது. அவர்களுக்கு 'குளிர்-பெட்டி' எல்லாம் மண்பாண்டங்கள் தாம்! அன்றாடம் கழுவி, பயன்படுத்தத் தக்கவை மண் கூஜாக்கள் முதலியன. தவிர, மண்ணில் பல இயற்கை உப்புக்கள் (Minerals) கலந்திருப்பதால் மண்பாண்டங்களில் தேக்கி வைத்து அருந்தும் நீர் உடல் நலனுக்கு உகந்ததென வல்லுநர்கள் கூறுகின்றனர்.

குறைந்த விலையில், தூக்கிச் செல்வதற்கு எளிதாய், நல்ல கை வேலைப்பாடுகளுடன் தற்கால மோஸ்தரில் குடி - தண்ணீர் கலங்கள் தயாரிப்பதில் திரு. தெய்வசிகாமணி உடையார் முன்னணியில் இருக்கின்றார். அரசாங்க அலுவலகங்கள், வாணிப நிலையங்கள், உணவு விடுதிகள், ரயில்வே நிலையங்கள் முதலியன திரு. உடையார் தயாரிக்கும் சுகாதாரமான மண்ஜாடிகள், கூஜாக்களை வாங்கிப் பயன்படுத்தி வருகின்றன. பல கண்காட்சிகளில் தமது தயாரிப்புகளைப் பார்வைக்கு வைத்து நற்சான்றுப் பத்திரங்கள் பெற்றுள்ளார். அரசாங்கத்தார் நடத்தி வரும் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட், ஹாண்டிகிராப்ட்ஸ் எம்போரியம் ஆகிய ஸ்தாபனங்களில் திரு. உடையார் தயாரிக்கும் கலங்கள் கிடைக்கும் என்பதே அவற்றின் சிறப்புக்கு அத்தாட்சி. நேராக அவரிடமிருந்தும் பெறலாம்.

முகவரி :

S. தெய்வசிகாமணி உடையார்,
4, பள்ளிஅரசு தெரு,
அய்யனாவரம், சென்னை-23

தொழில்பேட்டைகளிலுள்ள தொழிற்சாலை கட்டிடங்கள்

விலைக்கு வாங்க வசதி

சிறு தொழில்களுக்கான தொழில் பேட்டைகளிலுள்ள தொழிற்சாலைகளை ஒரேயடியாகவோ அல்லது தவணைமுறையிலோ (வாடகை-விற்பனை முறையிலோ) யாராவது விலைக்கு வாங்கிக் கொள்ளவிரும்பினால் அவர்களின் விண்ணப்பங்களை அங்கீகரித்து அவ்வாறு விற்கலாம்என்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். இம்முடிவு, ராஜ்ய சர்க்கார்களுக்கும் தேசிய சிறுதொழில்கள் கார்ப்பொரேஷனுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்சாலைகளை உபயோகிக்க விரும்புவோர், மனையையும் கட்டிடங்களையும் வாடகைக்கோ, அல்லது வாடகை-விற்பனை முறையில்விலைக்கோ அல்லது ஒரேமொத்தமாய் விலைக்கோ எடுத்துக்கொள்ள அனுமதிக்கலாமென்று தொழில் பேட்டைகளுக்கான மத்திய உதவித் திட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. தொழில் பேட்டைகளை ஏற்படுத்துவதன் லட்சியங்கள் நிறைவேறுமாறு பார்த்துக்கொள்வதற்காக, கட்டிடங்களை உபயோகிப்பது, அவைகளைக் கைமாற்றம் செய்வது முதலியன சம்பந்தமாக யுக்தமான நிபந்தனைகளை, வாடகைப் பத்திரங்களிலோ அல்லது விற்பனைப் பத்திரங்களிலோ அதிகாரிகள் சேர்க்கலாம்.

முன்னுக்கு வருபவர்

"சிசு"

வட சென்னையில் 'ராமு' என்ருல் ஒருவரைத்தான் எல்லோருக்கும் தெரியும். அவர்தான் படத்தில் காணப்படும் இளைஞர்.



ஊரில் குடி தண்ணீர் கஷ்டமா? மக்களுக்கு அலுவலகங்கள் போய்வர, சரியான பஸ் வசதிகள் இல்லையா? மழை பெய்தால் தெருவெல்லாம் வெள்ளக்காடாகி விடுகிறதா? குடிசைகளில் வாழும் மக்களுக்குத் தொல்லைகளா? அவ்வளவுக்கும் பரிகாரம் காண்பதில் ஆர்வமுடைய நல்ல இளைஞர்கள் சிலரின் முன்னணியில் ராமு இருப்பார். பொது நலப் பணி என்ருல் அவ்வளவு ஈடுபாடு. ஊருக்கு நல்லது செய்வதில் யாருக்கும் இளைத்தவரல்ல ராமு. சுறுசுறுப்பும், துடிதுடிப்பும், உழைப்பும் ராமுவின் நல் அணி கலன்கள்.

'ராமு' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. N. ராமதாஸ் நடிப்புக்கலையிலும் ஈடுபாடு மிக்கவர். உணர்ச்சியுடன் நடிப்பதிலும், தவறின்றித் தெளிவாக வசனங்கள் பேசுவதிலும் ராமுவை இன்றைய தமிழ்ப்படவுலகில் முன்னணியில் நிற்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரோடு ஒப்பிடலாம். தமிழில் மட்டுமின்றி தெலுங்கிலும் அழகாகப் பேசுவார். மேடைக் கலையில் அவருக்குக் கிடைத்த பேச்சுப் பயிற்சியே சிரமமின்றி நடிப்புக்கலையில் அவர் கால் ஊன்றுவதற்கு வித்தாயிற்று என்று சொல்லலாம்.

நடிப்புக்கலையைப் பொறுத்தவரையில் ராமு இன்று 'குடத்திலிட்ட விளக்காக' இருக்கிருரென்ருல் தவறு அவருடையதல்ல. முகஸ்துதி என்ருல் ராமுவுக்கு வேப்பங்காய். 'காக்காய் பிடிக்க' மட்டும் அவருக்குத் தெரிந்திருக்குமானல் அவர் திரை வானில், நாடக அரங்கில் ஒரு நட்சத்திரமாக மின்னிக்கொண்டிருப்பார். எந்த ஒரு நல்ல காரியத்துக்கும் காலம் வரவேண்டுமல்லவா? அந்த நற்காலம் ராமுவுக்கு அண்மையில் வந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அவர் நலனில் நாட்டம் கொண்ட சில நல்லவர்கள் அவரைக் 'கைதூக்கி விட' உறுதி பூண்டிருக்கிருர்கள்.

"உலகம்," "மனிதன்" போன்ற படங்களில் உபபாத்திரங்களில் தோன்றியுள்ள ராமு, பல அமெச்சூர் நாடகங்களில் முக்கிய பாகங்களில் திறம்பட நடித்திருக்கிருர். படத்துக்கேற்ற முகவெட்டும், இளமையும், நடிப்புத்திறமையும் கொண்ட இந்த இளைஞருக்கு, புதுமுகங்கள் தேடித்திரியும் படவுலகப் பெரியவர்கள் தக்க வாய்ப்பு கொடுப்பார்களானல் தமிழ்ப்படவுலகுக்கு நல்லதோர் நடிகரை அளித்த நற்பெருமை அவர்களுக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. ராமுவின் முன்னேற்றம் பொதுப் பணிக்கும் ஒரு பெரும் வாய்ப்பாகஅமையும்.

அவர் முகவரி:

திரு. N. ராமதாஸ்,

15, பொன்னப்பமுதலி

தெருவு,

வியாசர்பாடி; சென்னை-12.

—o—

கிராமாந்தர மின்சார வசதித் திட்டங்கள்

—o—

இந்தியாவில் மொத்தம் சுமார் 10,000 கிராமங்களுக்கு 1961 மார்ச் 31-ந்தேதிவாக்கில் மின்சார வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத் திட்டங்களுக்காக மொத்தம் 427 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதில் சுமார் 75 கோடி ரூபாய் கிராமாந்தர மின்சார வசதித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர் கதை:

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

[செல்வநம்பி (கதாநாயகன்) எஸ். எஸ். எல். ஸி. வரைப் படித்த இளைஞன். மேலும் படிப்பதற்கு அவனுக்கு கொள்ளை ஆசை. ஆனால் அவன் குடும்பம் ஏழை உழவர் குடும்பம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவனது தந்தை ஒரு நாளிரவு எங்கோ போய் விட்டார். வாழ்வில் முன்னேற நாட்டம் கொண்ட செல்வநம்பி ஒரு நாள் நள்ளிரவு யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறான்.

கால்போன போக்கில் நடந்து, ஒரு ஊரை அடைகிறான். படிப்பதற்கு அவ்வூர்ப் பெரும் பணக்காரரின் உதவியை நாடுகிறான். அவர் மறுத்து விரட்டி விடுகிறார். மனமுடைந்த செல்வநம்பி ஏமாற்றுக்காரனாகத் துணிவு கொள்கிறான். வழியில் நின்றிருந்த ஒரு காரில் திருடுகிறான். கிடைத்ததெல்லாம் பத்து ரூபாயும், இருஜோடி மேல்நாட்டு பாணி உடுப்புகளும் தாம். அவ்வழகான உடுப்புக்களை அணிந்து கொண்டு ஒரு உணவு விடுதியில் நுழைகிறான். அங்குதான் வேறொரு நபருடன் இரண்டு ஆள் தங்கும் அறையை எடுத்துக் கொள்கிறான். தேர்ச்சி பெற்ற திருடனான அந்த ஆளோடு சினிமாவுக்குச்செல்லும் சாலையில் குழந்தையின் கழுத்துச் சங்கிலியை அறுக்கிறான் செல்வநம்பி. மறுநாள் வைத்திய கல்லூரியில் சேரப்போகிறான். தான் முதலில் காரிலிருந்து திருடிய உடைகளும் பணமும் தலைமை ஆசிரியருடையதென்றறிகிறான். தான் திருடு கொடுத்த உடையை அணிந்து வந்துள்ள செல்வநம்பியை தலைமை ஆசிரியர் பரந்த மனப்பான்மையுடன் காட்டி ஆதரிக்கிறார்.

தொடர்ந்து நடக்கும் சம்பவங்கள் என்னவென்பதையறிய இனிப்படியுங்கள்—ஆ-ர்.]

4. மனக்குமுறல்

காலம் மனிதர்களைப் பிரித்து விடுகின்றது. செல்வநம்பி சென்ற ஒரு நாள் இரண்டு நாள் மூன்று நாள் வரையில் பொன்னியம்மாள் அந்த உழ்வர் வீட்டில்தான் இருந்தான். ஆனால், காலம் வ்ளர வளர அவள் கவலையும் வளர்ந்தது. பழைமையை நினைத்துப் புலம்புவதா? தற்போதைய நிலையை நினைத்துப் புலம்புவதா? அவளுக்கு இந்த உலகமே துன்பமயமாகக் காட்சி யளித்தது. கண்ணெதிரில் காணும் பெண்களெல்லாம் அவள் கண்களுக்கு மக்களைப்பிரிந்தவர்களாகவே காட்சியளித்தனர். மகன் உயிரோடு இருக்கிறானா? இல்லையா? என்பதே அவளுக்குச் சந்தேகம்.

பொன்னியம்மாள் நான்காவது நாள் காலையில் எழுந்தாள். 'மகனைத்தேடு' என்று அவளுடைய மனம் அவளுடைய உடலைத் தள்ளிக்கொண்டு சென்றது. யாரிடமும் சொல்லவில்லை; நடந்து கொண்டே இருக்கிறாள். வளநகருக்குத்தான் முதலில் செல்வநம்பியும் வந்தான். மருதமுத்துப்பிள்ளை இருப்பதும் அந்த நகரம் தான்.

கன்றைத் தேடும் பசுவைப்போல், கண்கள் குழிவிழுந்த நிலையிலும் நடந்து அலைகிருள்; வெயிலில் திரிகிருள்; குளக்கரையில் வந்து தங்குகிருள்.

தலை நிமிர்ந்து எதையோ பார்க்கிருள். அவளுடைய துன்பமான முகம் இன்பமாக மலர்கிறது. செல்வநம்பியைக் காணவில்லையே என்ற எண்ணம் மறைந்துவிட்டது. செல்வநம்பியை மறந்து விட்டளா? மறதி என்பது ஒன்று சில சமயங்களில் மனிதனுக்கு அளவற்ற இன்பத்தைத் தருகின்றது; மன அமைதியைத் தருகின்றது. அலைந்த அவள் உள்ளம் அமைதியில் ஆழ்ந்தது. அழகிய காட்சி அவள் கண் முன்...

* * * *

வேணு ஓடி வருகிருன்; அவன் பின்னலேயே நீலா துரத்திக்கொண்டு வருகிருள். பொன்னியம்மாள் முகம் புன்னகை புரிகிறது. நீலா வேணுவைத் துரத்திக்கொண்டு சென்ற வழியிலே ஒரு முள் வேலி இருந்தது. எனவே வேணு திடீரென நின்று உட்கார்ந்து விட்டான். பின்னல் சென்ற நீலாவும் அவன் தலைமேல் கைவைத்து இரண்டு முறை சுழற்றி ஆட்டி அவன் பின்னே உட்கார்ந்து கொண்டாள். ஒருவர் முதுகில் ஒருவர் சாய்ந்து கொண்டு மூச்சு இரைத்த நிலையில் உள்ளனர்.

நீலாவின் கையில் பூனைக்காஞ்சுருன் என்று சொல்லப்படும் செம்பட்டை இலை உள்ளது. அந்த இலைக்குப் பயந்து தான் வேணு ஓட்டம் பிடித்து வந்தான். திடீரென்று திரும்பினன். 'நீலா! உன் கையிலே இருக்கிற துணி முடிச்சைக்கீழே போட்டுடு. இல்லேன உதை விழும். அப்பாகிட்ட சொல்லிடுவேன்' என்ருன்.

நீலா, 'அண்ணு! இதோ போட்டுட்டேன். இன்னும் என்னைக் கண்டா ஓடமாட்டியே' என்ருள். 'ஆளுக்கு யாரு பயப்படருங்க இந்த உலகத்தில். ஆளுகிட்ட ஏதாவது ஆயுத பலமிருந்தாத்தானே பயப்படுருங்க'...என்று திரும்பி உட்கார்ந்தான்.

நீலா, அப்பொழுதுதான் பக்கத்திலிருந்த ஒரு செடியின் இலையைத் தொடுகிருள். அந்த இலைகள் தொட்டவுடன் வாடிவிட்டன. மீண்டும் இன்னெரு பகுதியைத் தொடுகிருள். அதுவும் வாடி விட்டது. உடனே, நீலா 'அண்ணு! இது என்ன இலை? தொட்ட உடனே சுருங்கி விடுகிறதே' என்று தொட்டுப் பார்த்துக்கொண்டே இருந்தாள். வேணு, 'அதன் பெயர் தொட்டால் சுருங்கி' என்று கூறி, எழுந்து கொள்ள முயன்ருன். அப்பொழுது நீலா, சரியாக அவன் முதுகில் ஒரு அடி வைக்கிருள். வேணுவின் முகம் கோணுகிறது, அப்பொழுது நீலா சிரித்துக்கொண்டே 'உன் முகத்துக்கு அடிச்சா சிணுங்கிண்ணு பேரு ....' என்று சொல்லிக் கொண்டே கீழேவைத்த துணி முடிச்சை எடுத்து விரித்தாள். மீண்டும் ஓட முயன்ருன் வேணு. நீலா, அந்த மூட்டையிலிருந்து ஒரு இலையை முதுகில் தேய்த்து விட்டாள். வேணு, 'ஐய்யோ குய்யோ' என்று நீலாவை முறைத்துக் கொண்டே அப்பாவிடம் ஓடுகிருன். சிவராமலிங்க வைத்தியரும் எதிரில் வந்து கொண்டிருக்கிருர்.

சிவராமலிங்க வைத்தியரைக் கண்டதும் மறைகிருள் பொன்னியம்மாள்.

'என்னடா வேணு! கத்திக் கொண்டே வர்ற......? என்னடா?' என்று கேட்டார் வைத்தியர். 'அப்பா! நீலா எம்முதுகிலே பூனைக்காஞ்சுருன் தடவிட்டாப்பா' என்ருன். வைத்தியர் நீலாவைப் பார்த்து, 'நீலா வா, இங்கே...அந்த எலைய முதுகுலே தேய்க்கலாமா, ஒரே எரியா எரியுமே...' என்று சொல்லிக் கொண்டே தன் பையில் கையை விட்டு ஏதோ மருந்து எடுத்தார். சிறிது தூரத்திலே நின்ற நீலா 'அப்பா! அண்ணு அந்த எலையைத் தேச்சா எரிச்சல் கொடுக்கும் இண்ணு சொல்லுச்சு. அதைத் தேய்த்துப் பார்த்துத் தெரிஞ்சுக்கலாம்ணு இப்படி செஞ்சுட்டம்பா' என்று சொல்லிக்கொண்டே மெல்ல நெருங்கி வந்தாள். வைத்தியர், கொஞ்சமா பணம் கொடுக்கற நோயாளிங்களுக்காக அந்த இலை பயன் படும். சரி, டேய் வேணு! இந்த வாரம் இந்த மூலிகை வரைக்கும் சேர்த்தது போதும். புறப்படுங்க போகலாம்' என்று சொல்லிக்கொண்டே தன் கையில் இருந்த மருந்தை முதுகில் தடவினர். 'அம்மா! ஜில்லுண்ணு இருக்கு' என்று சொல்லிக் கொண்டே வேணு நடக்கலானன். வைத்தியரும் ஒரு பை நிறைய மூலிகைகள் எடுத்துக்கொண்டு நடக்கிருர். நீலாவும் ஒரு மூட்டையை எடுத்துக் கொண்டு அவர்களோடு நடந்து செல்லுகிருள்.

நீலா, வேணுவைப் பார்த்து 'அண்ணு!' என்று சொல்லும்போதும், வேணு வைத்திய

ரைப் பார்த்து 'அப்பா!' என்று சொல்லும் போது மட்டும் முகம் சுளித்து, ஏனைய சமயங்களில் முக மலர்ச்சி கொண்ட பொன்னியம்மாள், வாயைப் பிளந்த வண்ணம் அங்கே செல்லும் மூவரையும் பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

மூவரும் அவள் கண்களை விட்டு மறைந்தனர். பொன்னியம்மாள், பக்கத்திலிருந்த பாம்பைக்கண்டு மருண்டு திகைப்பதுபோல் மறந்திருந்த செல்வ நம்பியின் நினைப்பு வரவே முக வாட்டம் கொண்டு அங்கிருந்து செல்லலானாள்.

பொன்னியம்மாளின் கண்களில் சாரைப் பாம்பைப் போல மருத முத்துப் பிள்ளை வீட்டின் மதில் சுவர் பட்டது.

மருத முத்துவின் பங்களாவிற்குள் சொந்தக்காரர் தவிர அயலார் அவ்வளவு எளிதில் நுழைய முடியாது. அவர் பங்களாவின் வாசற்படிக்கு முன்னாலேயே 'நாய்கள் ஜாக்கிரதை' என்று கொட்டை எழுத்தில் ஒரு போர்டு மாட்டப்பட்டிருக்கும்.

பொன்னியம்மாள் காரணமில்லாமல் அவர் வீட்டுக்கு வந்திருக்க மாட்டாள். காரணம் இருக்கலாம். வறுமை என்னும் குகைக்கு அச்சம் என்பது தானே கதவு. இந்த அச்சக்கதவைத் திறந்து சென்றால் தானே வறுமைக் குகையினின்றும் மனிதன் மீண்டு வரமுடியும்; மீள முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் தானே அச்சமும் அகலும். பண்புள்ள குடியிலே பிறந்தவள் பொன்னியம்மாள். இப்பொழுது பதுங்கிப் பதுங்கிப் பரிதாப நிலையில் வாழ்கிறாள். குணம் இருந்தும் பணம் இல்லாவிட்டால் இப்பொழுதும் உலகில் ஒருவன் பிணத்தினும் கிழானவன் தானே!

அந்த மாலை நேரத்திலே செக்கர் வானத்தின் எழிலைக்காண ஒரு சிங்காரி வந்து அந்த மாடியின் முன் பகுதியிலே நின்றாள். கன்னிப்பருவம் அடைந்தவள் என்பதை அவளுடைய அங்கமாற்றங்களும் அசைந்து நடக்கும் அன்ன நடையும் கண்களைக் கீழே சாய்த்தபடி சுற்றுமுற்றும் இருப்பதையெல்லாம் உற்றுப்பார்க்கும் பார்வையும் காட்டும். சிறிது நேரத்திற்குள் மற்றொரு அழகி 'அக்கா' என்று சொல்லிக் கொண்டே வருகிறாள். அதைக்கேட்ட கலாவதியும் 'வாடி, முல்லை!' என்று அழைத்துக் கொண்டே திரும்பினாள்.

முதலில் கலாவதியைக் கண்ட போது இருந்த மகிழ்ச்சியினும் முல்லையைக் கண்டதும் பொன்னியம்மாளின் உள்ளம், அந்தி நேரத்தில் வரும் முழுச் சந்திரனைப்போல மலர்ந்தது. மாடியிலே முல்லையும் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே வந்து, மாடியின் மேல் உள்ள முகப்பின் கண் வந்து நின்றாள்.

உலகத்துக்கு அழகு செய்ய ஒளி மிக்க சூரிய, சந்திரர் உள்ளனர். மருதமுத்துப் பிள்ளை வீட்டை அழகு செய்யக் கலாவதியும் முல்லையும்.

இந்தச் சந்திரர்கள் மட்டும் அல்ல; மற்றொரு வால் நட்சத்திரம் கூட அந்த வீட்டிலேயே இருக்கிறது. அதுவும் கூட வந்து விட்டது, அந்தக் கனகராசன் வருகையைக் கண்ட முல்லை, சிறிது மனத்தைச் சரிபடுத்துபவள் போல் அங்கேயே இருந்தாள்.

கனகராசன் கை கட்டிக்கொண்டே முல்லையின் பக்கமாக வந்து நின்றான். முல்லையும் மெல்ல நடந்து கலாவதிக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டாள்.

கனகராசன் இருவரையும் பார்த்து 'நான் ஒரு கணக்குப் போடுகிறேன் சொல்லி விடுகிறீர்களா? என்றான். 'உம் - போடு சொல்லி விடுகிறோம்' என்றாள் கலாவதி. கனகராசன், 'Bயின் தந்தை A என்பவன்; ஆனால்; Aயின் மகன் B அல்ல? இந்தக் கணக்கின் முடிவைச் சொல்லிவிடு, பார்க்கலாம்.' என்றான்; 'கணக்கு விசித்திரமா இருக்கே!' என்று சொல்லிக்கொண்டே யோசித்த நிலையில் இருந்தாள் கலாவதி.

அப்பொழுது ஒரு சப்தம் 'கலாவதி!' என்று கேட்டது, 'என்னப்பா?' என்று சொல்லிக்கொண்டெ கலாவதி அடியெடுத்து வைத்தாள். முல்லையும் அவள் பின் செல்லுவதற்கு அடியெடுத்து வைத்தாள். இதற்குள் கனகராசன், 'முல்லை! நீ சொல்லு பார்க்கலாம், என்றான். கணக்கினுடைய போக்கமைப்பைப் பார்த்தா சிக்கலாயிருக்கும் போலிருக்கு அண்ணா, இதை அக்காளே தான் சொல்வணும்' என்று கூறினாள். உனக்கு இது இன்னும் தெரியலை இனா நானே தெரிவிச்சுடறேனே; Aயின் மகள் தான் B; Aயின் மகன் B அல்ல. தெரிஞ்சுதா' என்றான்.

இதைக் கேட்ட பொன்னியம்மாள் 'மகள் அல்ல; மகன் தான் சொந்தம்!'

என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டாள். மாடியிலிருந்த முல்லை, 'ஏமாத்தற கணக்கண்ணு இது. இத ஏன் சொன்ன இப்ப?' என்ருள். 'முல்லை! இது கூட ஒரு கேள்வியா? உனக்குத் தெரியாம இருந்தால் தெரிவிக்கலாம் என்று சொன்னேன்' என்ருன். 'சரியண்ணு......சரி' என்று சொல்லிக்கொண்டே மாடியினின்றும் கீழே இறங்குகிருள். கனகராசனும் இறங்குகிருன்.

பொன்னியம்மாளும் சோர்ந்த நிலையில் முகவாட்டத்துடன் திரும்பி நடந்தாள். 'வாம்மா ஐயா கூப்பிட்டாரு உள்ளே' என்ற ஒலி கேட்டது. பக்கத்திலே பார்த்தாள் மருத முத்துப் பிள்ளையின் வீட்டு வேலைக்காரன் முனியன் வந்து கொண்டிருந்தான். திடுக்கிட்ட நிலையில் அவனைப் பார்த்து 'ஏன்? என்ருள் பொன்னியம்மாள். முனியன், 'எல்லாம் உள்ளே வந்துகேட்டுக்குங்க' என்று சொல்லி அழைத்துக்கொண்டு சென்ருன்.

மருத முத்துப்பிள்ளை வீட்டில் உட்கார்ந்து கொண்டு பணத்தை எல்லாம் எண்ணி இரும்புப் பெட்டியைத் திறந்து கொண்டிருக்கிருர். அப்பொழுது வாசற்படிக்கு வெளியே பொன்னியம்மாள் நிறுத்தப் படுகிருள்.

அந்த அந்தி நேரத்தில் தாமரைமலர் கூம்புதல் போலவே அவளுடைய உள்ளமும் மருத முத்துப்பிள்ளையைக் கண்டதும் கூம்பி விட்டது.

மருத முத்துப்பிள்ளை, பொன்னியம்மாளைப் பார்த்து, 'ஏம்மா! நீ தானே கொஞ்ச நேரத்துக்கு முன்ன அந்த மதில் மேலே கை வச்சுக்கிட்டுப் பார்த்துக்கிட்டிருந்தது?' என்று கேட்டார். தழுதழுத்த குரலில் 'ஆமாம்...ஆமாங்க' என்ருள். மருதமுத்துப்பிள்ளை ஏதோ சிறிது யோசிக்கிருர். பொன்னியம்மாளும் எதையோ எண்ணி யோசிக்கிருள். இதற்கு மருத முத்துப் பிள்ளை 'உன்னைப்போல இலங்கையிலே இருக்கற யாழ்ப்பாணத்துப் பொன்னுசாமி முதலியார் வீட்டுலே பார்த்ததாக ஞாபகம்......நீ இலங்கையிலே இருந்ததுண்டா...?' என்ருர் பொன்னி 'இல்லை. இல்லை. இலங்கையே எனக்குத் தெரியாதே' என்ருள். 'உன் பெயர் என்ன?' என்று கேட்டார். 'தங்கம்மாள்' என்று பொன்னியம்மாள் பதிலளித்தாள். கேட்ட மருத முத்துப்பிள்ளை, 'ஹ்ூம் அந்த அம்மா பெயரு பொன்னியம்மா. சரி, உன்னை இந்த மதில் சுவர் ஓரத்திலே எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். எதற்காக நீ இங்குவந்து நிற்கிற?' என்ருர். 'இந்த ஊரிலேயே உங்க வீடுதான் அழகாயிருக்குண்ணு பார்க்கிறதுண்டு. வேறே ஒண்ணுமில்லை' என்ருள். 'அப்படிண்ணு சரிதான். சில பேர் வழிங்க வீட்டைப் பார்க்கருப்பல பார்த்து வீட்லே பொருள் எல்லாம் எந்த இடத்தில் வைக்கிறது என்கிறதையும் பார்த்துக் கிட்டுப் போயிடறதும் உண்டு. அதனுல் தான் சந்தேகப் பட்டுக் கேட்டேன் என்று முடிப்பதற்குள், முனியன் 'பொருளெல்லாம் பார்த்து விட்டு மட்டும் போறதில்ல எசமா . எடுத்துக்கிட்டே போயிடுவாங்க...' என்ருன். 'அது எப்படிடா இத்தனை ஆளு இருக்க, இரும்பு பெட்டிக்குள்ள இருக்கிறதை எடுத்துக்கிட்டுப் போறது' என்ருர். முனியன் 'அதெல்லாம் ரொம்ப சுலபங்க. கண்ணுக்கு ஒருமை தடவிகிட்டு உங்களை உத்துப் பார்த்தாங்களானல் போதுமே......நீங்களே அவங்க வீட்டுக்கு இந்தப் பெட்டியோட தூக்கி கிட்டுப் போய் வைச்சுட்டு வரவேண்டாமா?' என்ருன். திடுக்கிட்ட நிலையில் மருத முத்துப் பிள்ளை 'அப்படியா......?' என்று சொல்லி, 'ஏ பொம்பள, நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்கப் படாது...தெரிஞ்சுதா...?' என்று கோபமாகக் கூறினர். 'சரிங்க' என்று சொல்லி விட்டுப் பொன்னி அம்மாள் அங்கிருந்தும் புறப்படத் தயாராஞள்.

உடனே, மருத முத்துப் பிள்ளை 'நீ ஏன் இப்ப இங்க வந்தாய்' என்ருர். 'காணுத மகனைத் தேடிக் கொண்டு வந்தேன்' என்ருள் பொன்னி. முனியன், 'எங்கே ஆளைக் காணுமே' என்ருன். 'காணவில்லை' என்ருள் பொன்னி. 'தேடி......வந்தேன் இன்று சொன்னயேம்மா' என்ருன் வேலைக்காரன். பக்கத்தில் கலாவதி, முல்லை, கனகராசன் ஆகியவர்களும் உள்ளனர். இதைக் கேட்ட கலாவதி, 'முனியா! சும்மாயிருக்க மாட்டயா பிள்ளையைக் காணம்ணு அந்த அம்மாபரிதாபப் படருங்க. குறுக்க புகுந்து குறும்பு பண்ண ஆரம்பிச்சுட்டியே' என்று அதட்டினள். முனியன் அடங்கிவிட்டான்.

பொன்னியம்மாள், 'காணுமப் போயி அஞ்சு நாளாச்சுங்க. என்னைக் கேட்காம வெளியே போக மாட்டான்' என்று சொல்லி முடிப்பதற்குள் மருத முத்துப்பிள்ளை, 'அந்தப் பிள்ளையினுடைய வயது என்ன

இருக்கும்?' என்று கேட்டார். 'இருபத்தஞ்சு வயது இருக்குங்க எங்காவது பார்த்திங்களா?' என்றாள். மருத முத்துப்பிள்ளை 'S.S.L.C. வரையில் படிச்சிருக்கானா?' என்றார். பொன்னியம்மாள் 'ஆமாங்க படிச்சிருக்கான். அவன் பெயர் செல்வநம்பிங்க' என்றாள். மருதமுத்துப்பிள்ளை, 'ஒரு நாலு நாளுக்கு முன்ன ஒருவன் இந்த வீட்டண்டை வந்தான், S. S. L. C. வரையில் படிச்சிருக்கேன்னு சொல்லி, மேலும் படிக்கப் பணம் கேட்டான். அவனுடைய கம்பளித் துணியும், அழுக்கு வேட்டியும் அவனைப் படிச்சவன் என்று காட்டல. நல்ல நிலையில் வந்தாலே நம்மகிட்ட சல்லிக்காசும் வாங்க முடியாது. இந்த நிலையிலே இந்தப் பரதேசிப் பய தந்திரப் பிச்சை எடுத்துப் பிழைக்க வந்தது இண்ணு நினைச்சு, 'போடா' இண்ணு சொன்னேன் - போகலே அவன். கன்னத்தில் ஒரு அறை கொடுத்தேன்' என்று கூறி முடிப்பதற்குள் பொன்னியம்மாளுக்குக் கோபம் வந்து விட்டது.

''அட பாவி! அடிக்கவா அடிச்ச என் குழந்தைய! அந்தக் கம்பளி மேலாடை உடையவன் தான் என் குழந்தை. S.S.L.C. வரையில் படித்தவன் தான் என் குழந்தை! பட்டினியோட படுக்கையிலிருந்து வந்த அவன் தான் என் குழந்த! உயிரைக்காக்க முடியாத பயிர்த் தொழில் செய்து, பிழைக்க வழிதேடி வந்தவன் தான் என் குழந்த! எங்கே அவன்? ஐயா சொல்லுங்கள் சொல்லுங்கய்யா? நம்பிய செல்வன் தான் அந்தச் செல்வநம்பி! ஏனையா மௌனம் சாதிக்கிறீங்க? ஆ! நம்பிய செல்வன் நழுவி விட்டானே?' என்று குமுறினாள்.

இதைக் கேட்ட மருதமுத்துப்பிள்ளை, கோபத்துடன் முனியனைப் பார்த்து, 'டேய் முனியன் இந்த குரைக்கற நாயை பிடிச்சு வெளியில் துரத்து' என்றார். பொன்னியம்மாள், 'ஐயா! எந்தப் பக்கம் போய் விட்டான் என் செல்வநம்பி? சொல்லையா' என்று கதறினாள், மருதமுத்துப் பிள்ளை 'பிச்சை எடுத்துப் பிள்ளையப்படிக்க வைக்கிற நிலையில் எதற்காகப் பிள்ளையைப் பெத்துக்கணும். பரிதாப நிலையில் கொஞ்சம் பரிந்து பேச வந்தால் பாயும் புலி போலச் சீறி விழுறயா? போபோ ...... நில்லாதே ...... இனி இந்தப்பக்கம் அடி எடுத்து வைத்தயோ...... என்று முடிப்பதற்குள் பொன்னியம்மாள் திரும்பி விட்டாள். ஒரு முறை மெல்லத் திரும்பி முல்லையைப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டே சென்று விட்டாள். அன்றிரவு கழிந்தது.

பொழுது விடிந்தது. அடுத்த ஒரு ஊருக்கு வந்து மகனைத் தேடுகிறாள். எங்கு தேடி என்ன பயன்? சோர்ந்த நிலையில் ஒரு திண்ணையின் மீது வந்து சாய்ந்து கொண்டாள்.

அப்பொழுது உள்ளே இருந்து ஒரு வாலிபன் வந்தான். அமைதியான தோற்றம்-செல்வர்க்கு வேண்டிய பணிவுடைமை-இரக்கம்-நேர்மையான சிந்தனை, இவ்வளவும் சேர்ந்தவன்.

பொன்னியம்மாளைப் பார்த்ததும் இவனுக்குப் பரிதாப உணர்ச்சி உண்டானது. 'நீங்கள் யாரம்மா? உள்ளே வாருங்கள்' என்று உள்ளே அழைத்துச் சென்றான். உணவு கொடுத்தான். பசி நீங்கிய பொன்னியம்மாள், 'தம்பி! நல்ல குணமிருக்கு உன்னிடத்தில். பணக்காரருக்கெல்லாம இதுபோல குணமிருந்தா பஞ்சமே நாட்டுக்கு இருக்காது. என்னைப் போல இருக்கறவங்களும் பிள்ளையைத் தேடி அலைய வேண்டியது இல்லே, நான் போயிட்டு வர்றேன்' என்று திரும்பினாள். 'அம்மா! எங்கேயும் போகாதிங்க! இங்கேயே இருங்க. உங்களுக்கு மனதில் வியாகூலம் போலத் தெரிகிறது. சிறிது ஆறுதல் பெறும் வரையில் இங்கேயே இருங்கள்' என்று சொல்லி நிறுத்திவிட்டான். பொன்னியம்மாளும் அலக்கழிந்த உள்ளத்துடன் அந்த வீட்டில் தங்கினாள்.

(தொடரும்)

ஃ ஃ ஃ

இந்திய கைத்தறித் துணி விற்பனையாகிற முக்கியமான நாடுகள் இலங்கை, ஏடன், ஈராக், தென் அரேபியா, சூடான், பிரிட்டிஷ் மேற்கு ஆப்பிரிக்கா, மலேயா, ஆகிய வையாகும். இந்தியக் கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் நல்ல கிராக்கி காணப்படுகிறது.

நல்ல அனுபவம் வாய்ந்த டிப்பாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:—

'தொழில்', 55 எடப்பாளையம் தெரு, சென்னை-3.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor
(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.



★

Please Contact us for
Collapsible Gates,
Main Gates,
Window Grills,
Ventilators and all other
Building materials

★

Steel Trusses and erection works undertaken.



COLLAPSIBLE GATE

Specialist in Arc and Gas welding.

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.



MAIN GATE

Our motto is to satisfy our customers.

பன்னீர் (ROSE WATER)

—எக்ஸ். வி. கொரேரா—

பன்னீர், பலவிதவாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கும் திருமணங்கள் போன்ற வைபவங்களில் தெளிப்பதற்கும் உபயோகப் படுகிறது. இதை ஒரு மலிவான வாசனைத்திரவியம் என்று சொல்லலாம்.

பன்னீரைப் பலவித முறைகளில் தயாரிக்கலாம். இருந்தாலும் சுலபமான இரண்டு முறைகளைப்பற்றி மட்டும் இப்போது கவனிப்போம்.

பன்னீர் தயாரிப்பதற்கு சுத்தமான தண்ணீரும் ரோஜா இதழ்களும் அல்லது ரோஜா எண்ணெய் (Oil of Rose) தேவைப்படுகின்றன. உபயோகிக்கக் கூடிய தண்ணீர் காய்ச்சி வடிகட்டிய தண்ணீராக (Distilled Water) இருப்பது நல்லது. அல்லது தண்ணீரைக் நன்றாகக் கொதிக்க வைத்து வடிகட்டி குளிர வைத்து உபயோகிக்க வேண்டும். பன்னீர் பலநாட்களுக்கு பாட்டில்களில் கெட்டுப்போகாமல் இருக்க அதனுடன் ஆல்ககால் (Alcohol) அல்லது லிக்விட் பிரிசர்வேடிவ் (Liquid Preservative) சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

செய்முறை :

நல்ல ஜாதி ரோஜா பூக்களிலிருந்து ½ பவுண்ட் எடைக்கு இதழ்களை மட்டும் எடுத்து அதை ஒரு மண் பாண்டத்தில் போட வேண்டும். மற்றொரு மண்பாண்டத்தில் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து சுமார் 40 அவுன்ஸ் அளவு தண்ணீரை ரோஜா இதழ்கள் உள்ள பாண்டத்தில்கொட்டி காற்றுப் புகாமல் பாத்திரத்தை நன்றாக மூடிவைக்க வேண்டும். சுமார் இரண்டு மணி நேரத்திற்குப்பின் வடிகட்டி எடுத்துக் கொண்டால் நல்ல பன்னீராக இருக்கும். பன்னீர் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் தண்ணீரின் அளவு, உபயோகிக்கும் ரோஜாவின் உயர்ந்த ரகத்தைப் பொருத்திருக்கும். நல்ல வாசனையுள்ள ரோஜாவாக இருந்தால் சற்று அதிகமான அளவுக்குத் தண்ணீர் சேர்த்துக்கொள்ளலாம்.

செயற்கைமுறை பன்னீர் :

ரோஜா இதழ்கள் இல்லாமலும் செயற்கை முறையிலும் தயாரிக்கலாம்.

தேவையான பொருள்கள் :

ரோஜா எண்ணெய் : 1¼ அவுன்ஸ் அளவு

ஆல்ககால் 1½ அவுன்ஸ் அளவு

தண்ணீர்: 1 காலன்

ரோஜா எண்ணெயையும் ஆல்ககாலையும் ஒன்று சேர்த்து நன்றாகக் கலக்க வேண்டும். அப்போது ஆல்ககாலில் ரோஜா எண்ணெய் கரைந்து தண்ணீரில் கரையக் கூடிய கலவை (Mixture) யாக மாறி விடுகிறது. பிறகு ஒரு காலன் கொதி நீரில் இந்தக் கலவையை சேர்த்து குளிர்ந்த பின் பாட்டில்களில் அடைத்துக் கொள்ளலாம்.

பன்னீர் நல்ல வாசனையுள்ளதாக இருக்கவேண்டுமானால் கொஞ்சம் ரோஸ் ஒட்டோ (Otto of Rose) சேர்த்துக்கொள்ளலாம்.

∴ ∴ ∴

சென்ற இரண்டு ஆண்டுகளாக கைத்தறித் துணி மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணியின் அளவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. கைத்தறித் துணி ஏற்றுமதிமூலம் 1954-55-ல் கிடைத்த வருமானம் 822 லட்சம் ரூபாயாக இருந்தது 1955-56-ல் 846 லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

புற்று நோய் ஆராய்ச்சிக்கு அணுக் கதிரியக்கக் குரோமியம்

அமெரிக்க சுரங்க இலாகா ஆராய்ச்சி நிலையம் கதிரியக்கக் குரோமியத்தில் சிறு "மாத்திரைகள்" கண்டு பிடித்திருப்பதாகவும் அவை புற்று நோய்தீர்க்க உதவும் என்றும் உள்நாட்டு இலாகா காரியதரிசி பிரட் சியட்டன் அறிவிக்கிறார். அவை ஒரு அங்குலத்தில் பத்தி லொரு நீளம் உள்ள சின்னஞ் சிறிய உருளைகள்: அவற்றின் குறுக்களவு அதற்கும் குறைவு: அவைமிகவும் தூய்மையான குரோமியக் கம்பியினின்று வெட்டி எடுத்தவை. சுரங்க இலாகாவில் உலோக விஞ்ஞானிகள் கண்டுபிடித்த முறைகளைக் கொண்டு சுரங்க இலாகா இந்தக் கம்பியைச் செய்துள்ளது. அணு உலையில் குரோமியம் உருளைகளை வைத்து நியூட்ரான்களைப் பாய்ச்சினால், அந்தக் குரோமிய அணுக்களில் சில, அணுக் கதிரியக்கக் குரோமியம் 51 என்னும் ஐஸோடோப்புகளாக மாறுகின்றன. அந்த ஐஸோடோப்புகள் ரேடியத்தைப் போன்று காமாக் கதிர்களை வெளியிடுகின்றன. அந்தக் கதிரியக்க உருளைகளை மிருகங்களுக்குக் கொடுத்துச் சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் கலைவளர்ச்சிக்கு பாங்கிகளின் ஆதரவு

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே கல்விக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் வைத்திய ஆராய்ச்சிக்கும் ஆதரவு அளிப்பது முன்னேற்றத்துக்கு இன்றியமையாததாயிருந்தது; இன்று கலைகளை ஆதரிப்பது அவ்வாறு விளங்குகிறது." ஆடல் பாடல்களுக்காக உருவாக்க எண்ணியுள்ள லிங்கன் மன்றத்துக்கு 2,50,000 டாலர் நன்கொடை நல்கிய பஸ்ட் நேஷனல் ஸிட்டி பாங்கியின் தலைவர் ஹாவர்ட் ஸி. ஷெப்பேர்ட் கூறும் மொழிகள் இவை.

லிங்கன் மன்றத்தில் ஆடல்பாடல்களுக்குரிய அரங்குகள் கட்டப்படும்; இவை 1963-க்குள் கட்டி முடிக்க வேண்டும் என்பது ஏற்பாடு.

ஏற்கெனவே இந்த மன்றத்துக்காக போர்டு தர்ம நிதி ஸ்தாபனம் 1,25,00,000 டாலரும், ராக்பெல்லர் ஸ்தாபனம் 1,00,50,000 டாலரும், அவலான் தர்ம நிதி ஸ்தாபனம் 24,00,000 டாலரும் வழங்கியுள்ளன. திருமதி வி. போமன்ட் ஆலன் என்பவர் தனிப்பட 30 லட்சம் டாலர் வழங்கியுள்ளார். நியூயார்க்கிலுள்ள 17 வியாபார பாங்கிகள் மொத்தம் 12,25,000 டாலர் உதவியுள்ளன.

இப்பொழுது 3,05,26,000 டாலர் சேர்க்கவேண்டும் என்று திட்டம் போட்டுப் பணம் திரட்டுகிறார்கள், மொத்தம் 750 லட்சம் டாலர் நன்கொடை பிரிக்கவேண்டும் என்பது குறிக்கோள்.

Phone : 2438 Grams : MARIGOLD

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர்உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

குடும்பக் கட்டுப்பாடு

[டாக்டர் பி. லட்சுமி]

குடும்பம் என்பது ஏறக் குறைய மனிதன் தோன்றிய போதே தோன்றியது. அது ஆழ்ந்து வேரோடியிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம் அண்மையில் தான் மக்கள் மனதில் உதித்தது. தொடக்கத்தில் வேட்டையாடுபவனாகவும், பின்னர் விவசாயியாகவும் இருந்த மனிதன், தன் குடும்பம் எவ்வளவுக் கெவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அதற்குப் பொருளாதார பலமும், பாதுகாப்பு பலமும் இருப்பதாகக் கருதினான். 19-வது நூற்றாண்டில் விஞ்ஞானப் பூர்வமான மருந்துகளும், தொத்து நோய்த் தடுப்பு வழிகளும கண்டு பிடிக்கப்பட்டன. நோய்களைத் தடுக்க அந்த முறைகள் படிப்படியாக அனுசரிக்கப்பட்டன. எனவே ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த இயற்கையாக இருந்த முறைகள் மறையலாயின. பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த திட்டமிட்ட முறை எதுவும் இல்லாதுபோகவே, ஜனத்தொகை திடீரென அதிகரிக்கலாயிற்று. ஆனால் உலகின் ஜனத்தொகை அதிகரிப்பதற்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. அதன் விளைவாக ஏற்கனவே இருந்த கொஞ்ச ஆதார வசதிகளுக்கு நிறைய மக்கள் என்ற நிலைமையை நாம் எதிர் நோக்கி நிற்கிறோம். பலநாடுகளில் சமூகப் பொருளாதார நிலைமை இதுபோல் இருப்பதனால் ஜனத்தொகை அதிகரிப்பானது வாழ்க்கைத் தர உயர்வுக்கு ஒரு தடையாகவே இருக்கிறது.

உலகின் ஜனத்தொகை, முன்பு எப்பொழுதும் இருந்ததை விட இன்று அதிகம்.

உலக சுகாதார நிலையத்தின் 10-வது ஆண்டு விழா ஜூலை 27-ந் தேதி சென்னை மாநிலம் முழுவதும் கொண்டாடப் பெற்றது. மக்கள் நோயற்ற வாழ்வு வாழ்வதே குறைவற்ற செல்வமாகும். இந்தியாவில் நோய்த் தடுப்புக்கும், தாய்-சேய் நலனுக்கும் உலக சுகாதார நிலையம் பேருதவிகள் புரிந்துள்ளது. அதன் 10-வது ஆண்டு விழா நினைவாக இந்தக் கட்டுரையை வெளியிடுகிறோம். திடகாத்திரமான குழந்தைகள் பெற்று மக்கள் நல்வாழ்வு வாழ அரிய பல யோசனைகள் இக்கட்டுரையில் பொதிந்துள்ளன. ஆ-ர்.

கி. பி. 1040ல் 54 கோடியாக இருந்த உலக ஜனத்தொகை இன்று 273 கோடியாக இருக்கிறது. ஆண்டுக்கு 2½ கோடி வீதம் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. இந்தியாவும், சீனாவும் ஆண்டுக்கு தலா 50 லட்சம் வீதம் ஜனத்தொகையைப் பெருக்கி வருகின்றன. உலக ஜனத்தொகை ஆண்டுக்கு 1 சதவிகிதத்திற்கு மேல் அதிகரிக்கிறது. 1980ல் மக்கள் தொகை 400 கோடியாகிவிடும் என்றும் இந்த நூற்றாண்டின் முடிவில் 600 கோடி அல்லது, 700 கோடி ஆகலாம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

4 விநாடிக்கு ஒரு குழந்தை!

1901ல் பாகிஸ்தான், ஜம்மு-காஷ்மீர் பகுதிகள் நீங்கலாக இந்தியாவின் மக்கள் தொகை 23½ கோடி. 1951ல் இது 35½ கோடியாகியது. சுமார் அரை நூற்றாண்டுக் காலத்தில் இந்தியாவில் மக்கள் தொகை பாதி மடங்கு அதிகரித்துள்ளது. 1921க்கும் 1941க்கும் இடையில் மக்கள் தொகை கால் மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது. உலகிலேயே இது தன்னிகர் இல்லாத அதிகரிப்பு ஆகும். 1941-51க்கு இடையில் மக்கள் தொகை எட்டில் ஒரு பங்கு அதிகரித்துள்ளது. நமது மக்கள் தொகை இந்த விகிதத்தில் அதிகரித்துக்கொண்டு போனால்—1951ல் 36 கோடியாக இருந்த மக்கள் தொகை 1961ல் 41 கோடியாகவும், 1981ல் 72 கோடியாகவும் அதிகரித்து விடும். இந்தியாவில் மக்கள் தொகை நிகர அதிகரிப்பு ஆண்டுக்கு 50 லட்சம் எனக்கருதப்படுகிறது. இந்தியாவில் சுகாதார அபிவிருத்தித் திட்டங்களின் பலனாக ஆண்டு ஒன்

றுக்கு 30 லட்சம் உயிர்கள் காப்பாற்றப்படும் என்று அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்று கூறுகிறது. இதன் மூலம் மக்கள் தொகை நிகர அதிகரிப்பு 80 லட்சம் ஆகும். நான்கு வினாடிக்கு ஒரு குழந்தை வீதம் பிறக்கிறது. அதாவது ஒரு நாளைக்கு ஒரு நகரமே ஆகக்கூடிய 20,000 மக்கள் பிறக்கிறார்கள்!

இந்தியாவில் வாழ்க்கைத் தரம் ஏற்கனவே மிகக் குறைந்த நிலையிலுள்ளது. சுகாதாரம், சக்தி, உற்பத்தித்திறன், கல்வி ஆகியவைகளில் குறைந்தபட்சத் தேவைக்கும் குறைவாக அந்த வாழ்க்கைத் தரம் உள்ளது.

இந்தியாவின் 37 கோடி மக்களில் பெரும்பாலானோர் நிரந்தரமான அரைப்பட்டினியாக இருக்கிறார்கள் என்பதே இதன் பொருள். அதன் காரணமாக நிறைவான தேக நலமும், தேக திடமும் அடைய முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலான மக்களுக்கு மிக அடிப்படையான அத்யாவசியத் தேவைகள் கூடக் கிடைப்பதில்லை. எனவே, மக்கள் தொகை அதிகரித்து, ஏழைக் குடும்பங்களில் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமானால் அனர்த்தம் ஏற்படும். வாழ்க்கைத் தரம் மேலும் குறைய நேரும். ஜனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க உடல் நலிவும், மன நலிவும் அடைந்த ஆண்களும், பெண்களும் அதிகரித்து வருகிறார்கள் என்பது பொதுப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. தேசம் முழுவதிலேயும் ஆண்டுதோறும் உழைப்பவர்கள் எத்தனைபேர் இருக்கின்றனரோ அதைவிட அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன. பள்ளிகளில் எவ்வளவு இடவசதி இருக்கின்றதோ அதைவிட அதிகமாகக் குழந்தைகள் ஜனிக்கிறார்கள். ஆஸ்பத்திரிகளில் எவ்வளவு சிகிச்சை வசதி இருக்கிறதோ அதைவிட அதிகமான நோயாளிகள் இருக்கிறார்கள். கண்மூடித்தனமான பெருக்கம் காரணமாக, சார்ந்து வாழ்கின்றவர்கள் தொகை மிக அதிகரிப்பதால் பொருள் உற்பத்திக்கும் வாழ்க்கைத் தர அபிவிருத்திக்கும் பெரிய இடையூறு ஏற்படுகிறது.

வேலை செய்பவர் ஒருவர்; குந்தி உண்பவர் அறுவர்!

இந்தியாவில் சம்பாதிப்பவர்கள் 100 பேர் என்றால் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள் 550 பேர் இருக்கிறார்கள். அமெரிக்காவிலோ 100 பேர் சம்பாதிப்பவர்கள் என்றால் சார்ந்து வாழ்பவர்கள் 154 பேர், பிரிட்டனில் 121 பேர். இந்த தேசத்தில் வேலை செய்பவர்கள் குறைவு; சாப்பிடுவதற்காக இருப்பவர்கள் அதிகம் என்பதையே இப்புள்ளி விவரம் காட்டுகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவாக பொதுஜன ஆதரவைத் திரட்டவும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆலோசனையும் உதவியும் அளிக்கவும் முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வகை செய்யப்பட்டது. நகரப் பகுதிகளில் 500ம் கிராமப் பகுதிகளில் 2000மும் ஆக மொத்தம் 2500 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களை நிறுவுவதற்கு இரண்டாவது திட்டத்தில் சுமார் ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 50,000 ஜனங்களுக்கு ஒரு குடும்பக் கட்டுப்பாடு நிலையம் வீதம் ஏற்படும். குடும்பக் கட்டுப்பாடு உணர்ச்சியை ஏற்படுத்துவதும், ஆலோசனை உதவியை அளிப்பதும் இந்த நிலையங்களின் நோக்கமாகும். இது சம்பந்தமாக அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப் போதிய அளவு நிலையங்களை ஏற்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநிலத்தில் நகரங்களில் 14 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும் கிராமங்களில் 52 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும் ஏற்பட்டுள்ளன. இதில் நகரங்களுக்கான 3 நிலையங்கள் சென்னை நகரில் உள்ளன. சென்னை நகரிலும், ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் பெரும்பாலான தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனை வேலைகள், பிள்ளைப்பேறு—குழந்தை நல சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளன. கிராமிய குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களிலுள்ள அலுவலர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விஜயம் செய்து குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனைகள் கூறி வருகின்றனர். சென்னை நகரத்தில் பெரும்பாலான நகராட்சி, குழந்தை நல நிலையங்களிலும் ஜனன, மரணப்பதிவு நிலையங்களிலும் முறையே தாய்மார்களுக்கான தகவல் அறிவிப்பு நிலையங்களும், தந்தையர்களுக்கான தகவல் அறிவிப்பு நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களுக்கு வரும் தாய்மார்களுக்கும் தந்தையர்களுக்கும் பயிற்சி பெற்ற டாக்டர்களாலும், இதர அலுவலர்களாலும் குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அந்நிலையங்களில் பொதுமக்களுக்கு கருத்தடைக் கருவிகள் இலவசமாகவும், குறைந்த

விலையிலும் வழங்கப்படுகின்றன. சென்னை அரசாங்கம் வெளியிட்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு புத்தகம் கல்யாணமான தம்பதிகளுக்கு, கருத்தடை முறைகள் பற்றியும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அறுவை சிகிச்சை முறை பற்றியும் ஒப்பற்ற ஆலோசனைகளைக் கூறுகிறது.

ஆண்டவன் செயல்!

பெருவாரியான மக்கள் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள மக்கள் குழந்தை பெறுவதை ஆண்டவன் சித்தம் என்று நினைக்கிறார்கள். குழந்தைப் பிறப்பைத் தடுப்பது ஆண்டவனுக்கு எதிராக செய்யப்படும் குற்றம் என்று நினைக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மக்களை நாம் அறவே புறக்கணித்து விட்டுப் போக முடியாது. ஏனெனில் அவர்களுக்குத்தான் குடும்பக்கட்டுப்பாடு மிகவும் அவசியம்.

கல்யாணமான தம்பதிகள் ஒவ்வொருவரும் குடும்பக் கட்டுப்பாடு முறையை அனுசரிக்க வேண்டும். (1) பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் விரும்பிப் பெறப்படும் குழந்தையாக இருக்க வேண்டும். நல்லபடியாக பராமரிக்கப்பட வேண்டும். குழந்தை பெறும் தம்பதிகள் பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் ஆகிறார்கள். அந்தக் குழந்தை அகால மரணம் அடையாமலும், அதற்குத் தகுந்த உணவு வசதி அளிக்கவும், சுகாதார வசதி அளிக்கவும், வாழ்க்கை நல்ல முறையில் ஆரம்பிக்கவும் பெற்றோர்கள் பொறுப்புடையவர்கள்.

2. தாயின் உடல் நலனையும் வலுவையும் பாதுகாப்பதற்காக (ஒரு குழந்தைக்கும், மறு குழந்தைக்கும்) இடையில் குறைந்தது 4 வருஷ கால இடைவெளி இருக்கச் செய்வது அவசியமாகும். தனது மனைவியின் உடல் நலத்தையும், உடல் வலுவையும் பாதுகாக்கும் பொறுப்புடைய ஒரு ஆண் மகன் தனது கடமையை நிறைவேற்றக் குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அவசியமாகும்.

இந்தியாவின் தேசிய நலனைக் கருதியும், தேசிய ரீதியில் திட்டமிடுவதைக் கருதியும் மக்கள் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம் என்று திட்டக் கமிஷன் கூறியுள்ளது.

3 எனவே தேசத்தின் பால் தங்கள் கடமையை ஆற்ற, விவாகமான தம்பதிகள் அனைவரும் குடும்பக் கட்டுப்பாடு முறையை அனுசரிப்பது அவசியமாகும். பிறப்பு விகிதம் மிக உயர்ந்து இருப்பதும் அதிகமாய் இருந்த இறப்புவிகிதம் குறைந்து வருவதும் இந்தியாவின் தற்போதைய பிரச்னையாகும். விவாகமான தம்பதிகள் ஒவ்வொருவரும் 3 குழந்தைகளுக்கு மேற்போகாமல் நிறுத்திகொள்வார்களானால் "வசதி இல்லாத நிலையில் பிறக்கும் குழந்தைகள்" என்பது குறைந்து, வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழி ஏற்படும். இதன் மூலமாக குழந்தை மரண விகிதமும்குறையும். பல்வேறு வயதிலுமாக ஆண்டுதோறும் சுமார் ஒரு கோடி மக்கள் மடிகிறார்கள். அவர்களின் 40 லட்சம் பேர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாகும். எனவே தேசத்தின் நலனைக் கருதி பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் குறைக்கப்படவேண்டும். தனிப்பட்டவர் ஒவ்வொருவரும் அத்தியாவசிய அடிப்படை தேவைகளான உணவு, குடியிருப்பு வசதி, தண்ணீர், சுகாதாரம், கல்வி, வேலை வசதி ஆகியவைகளைப் பெறவேண்டும். தங்கள் நலனுக்காகவும் தேசத்தின் நலனுக்காகவும் விவாகமான தம்பதிகள் ஒவ்வொருவரும் குடும்பக்கட்டுப்பாடு முறையை அனுசரித்து தேசம் மேற்கண்ட லட்சியத்தை அடைவதற்கு உதவி புரிய வேண்டும். 3 குழந்தைகள் பெற்றுன பின்பு மேற்கொண்டு பெறுவது இல்லை என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

—✻—

மின்சாரக் கைக்கடிகாரம்

முதன் முதல் மின்சாரக் கைக்கடியாரம் செய்ய முயன்று செய்து பார்த்த மாடல்களும், செய்யப்போகும் கடிகாரத்தின் மாடலும் அமெரிக்காவில் சிமிசோனியன் நிலையத்தில் உள்ளன. இவை ஹாமில்டன் வாட்ச் கம்பெனி செய்தவை. 15ம் நூற்றாண்டு முதல் கைக்கடிகாரத்துக்கு இயக்கும் சக்தியாக விளங்கி வருவது மெயின் ஸ்பிரிங். இப்பொழுதுதான் அதற்குப் பதில் புதிய ஒரு சக்தி பொருத்தப்படுகிறது. அதுதான் மின்சார சக்தி; இந்த புதிய மின்சாரக் கைக் கடிகாரத்துக்கு மெயின் ஸ்பிரிங் வேண்டியதில்லை. சிறிய சட்டைப் பொத்தான் அளவுள்ள பாட்டரியால் அது இயங்கும். அந்த பாட்டரியிலிருந்து மின்சாரம் நுண்ணிய கம்பிச் சுருள் வழியாகச் செல்லும். இந்த மின்சாரத்தாலும் அங்குள்ள காந்தத்தாலும் "பாலன்ஸ் வீல்" இயங்கும்.

ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

Doctors Agree is Good for You & Me.

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

Get a tin today.

ALVITONE LABORATORIES, MADRAS-16

★

சுவை மிக்கது ! **வலிமை தரக்கூடியது !** **சோர்வு நீக்கி சுகம் தருகிறது !**

ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு பானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை

சென்னை-16

மனக் கதவும் திறந்தது!

"நாதிரா"

வைதேகிக்கு இருப்புக் கொள்ளவில்லை, ஒரே வேதனையாக இருந்தது; சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தாள். முகத்தைச் சுளித்துக் கொண்டாள். முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். புரண்டு உட்கார்ந்தாள். கால்களை மடித்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

தந்தையிடம் இருந்து அவளால் தப்பவே முடியவில்லை. ஆனால் சிவநேசனோ தன் மகளைப்பொருட்படுத்தாமல் இராமாயணக்கதையை விளக்கிக் கொண்டிருந்தார்.

'அந்தச் சமயந்தான்குமாரி ஜானகி தோழியரோடு, பூப்பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அபாரமாக ஆடிக் கொண்டிருந்தாள். தோழியர்கள் அவளிடமிருந்து பந்தைத் தட்டிப் பறிக்கப் படாதபாடு பட்டனர், பாவம், ஒருவராலும் முடியவில்லை. ஜனகர் இதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு மெய்ம்மறந்து நின்றிருந்தார்.

"திடீரென்று ஒருத்தி ஜானகியின் கையில் இருந்த பந்தைத் தட்டிவிட்டாள். பந்து உருண்டுகொண்டே போய் சுவர் ஓரத்தில், இருந்த சிவதனுசுக்கடியில் மாட்டிக்கொண்டது: தோழியர் எல்லாம் திகைத்து நின்றனர், பந்தை எப்படி மீட்பது என்று புரியாமல். கனம் வாய்ந்த அச்சிவதனுசை அசைக்க வீராதி வீரராலும் முடியாது,பாவம், அத்தோழியர், பூவினும் மெல்லிய மேனியினர் என்ன செய்வார்கள்?

"ஜானகியோ பொறுமையிழந்தவளானாள். தோழியர் திகைத்து நிற்பதைக்கண்டவுடன் விடுவிடென்று போனாள். இடக்கரத்தினால் சிவதனுசை அலட்சியமாகத் தூக்கி அடியில் இருந்தப் பந்தை வெளியே எடுத்துப் போட்டாள். இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஜனகருக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது.

"மல்லர்கள் எவரும் முடிக்க முடியாத இக்காரியத்தைப் பாலகி ஜானகி மென்கரத்தினால், அநாயாசமாக, தூக்கியது எல்லையற்ற சந்தோஷத்தை உண்டு பண்ணியது. உடனேயே மகளுக்கேற்ற மணாளன் எப்படி இருக்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டார்."

இந்தச் சமயத்தில் சுவர்க் கடிகாரம் மணி ஐந்தடிக்கவே ராமாயண ஸ்வாரஸ்யம் தடைப்பட்டது. சிவநேசனும் நிறுத்தினார்.

அப்பாடா! தந்தையினால் உண்டான தலைவேதனையிலிருந்து, தப்ப வழி பிறந்தது. வைதேகி உடனே, "அப்பா! ராமாயணம் இன்று இவ்வளவு போதும்; மணியாகிவிட்டது. மாம்பலத்திற்கு அத்தை வீட்டிற்குப் போவதை மறந்து விட்டீர்களா? எப்ப புறப்படுவது?" என்று தந்தையைத் துரிதப் படுத்தினாள்.

"ஆமாம் அம்மா! நானும் மறந்தே விட்டேன். உன் அத்தை ஒரே அடியாய் பிடித்துக் கொள்வாளே வராது போனால்...? எழுந்திரு! எழுந்திரு! புறப்படுவதற்குத் தயார் ஆகிக் கொள்" என்று வீட்டுக் குழாயடிக்குச் சென்றார் சிவநேசன்.

சிறிது நேரத்தில் 'டிரஸ்' செய்துகொண்டு இருவரும் வீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு தெருவில் நடந்தனர்.

"பஸ்ஸிலா? ரயிலிலாம்மா?" என்று மகளைப் பார்த்துக் கேட்டார் சிவநேசன்.

"மாம்பலத்திற்குப் பஸ்ஸில் போனால் நேரமாகும் அப்பா! எலக்டிரிக் டிரயினில் போய் விடலாம்" என்றாள் வைதேகி. சிவநேசன் எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடையைக் கட்டினார் மகளுடன்.

ஃ ஃ ஃ

சிவநேசன் ஒரு ரிட்டையர்டு சர்க்கார் உத்தியோகஸ்தர். நல்ல பென்ஷனும் கிடைத்தது. அதைக் கொண்டு தாய் இல்லாத் தன் அருமை மகள் வைதேகியுடன் நிம்மதியாக வாழ்ந்து வந்தார்.

வைதேகி பெண்கள் கல்லூரி ஒன்றில் 'இண்டர்' படித்துக் கொண்டிருந்தாள்.

பருவத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட வைதேகி

பூரண எழிலுடன் விளங்கினாள். நல்ல கணவன் ஒருவனுக்கு அவள் வாழ்க்கைப் பட்டு விட்டால் அதுவே சிவநேசனுக்குப் போதுமானது.

குறையொன்றும் தெரியாமல் தன் பெண்ணை வளர்த்து விட்டார் சிவநேசன். போன இடத்தில் கண் கலங்காமல் இருந்தாலே போதும் என்பது அவரது ஆசை.

மகளுக்கேற்ற மணாளனைத் தேடலானார் சிவநேசன். புற அழகில் மட்டும் அவர் மனம் தன் மகளுக்கேற்றவனைத் தேடவில்லை. அகமும், அழகுடன் விளங்குபவனாகவே தேடலானார்.

செல்வம் உடையவனை அவர் உள்ளம் தேடவில்லை. கிடைத்த செல்வத்தை-தன் மகள்வைதேகியை-வைத்துப் போற்றக் கூடியவனையே அவருள்ளம் தேடிற்று.

ஆனால் அவருடைய லட்சிய மருமகன் கிடைப்பதாகக் காணோம். "கிடைப்பானா?" என எண்ணிக் குழம்பியது அவர் மனம்.

சிந்தனையுடன் மகளோடு இயந்திரம் போல் நடந்து கொண்டு வந்தார் சிவநேசன்.

"அப்பா இதோ நில்லுங்கள். டிக்கட் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று ஓடினாள் வைதேகி.

டிக்கட் வாங்கிக் கொண்டு வந்த வைதேகி, "என்னப்பா ஒரே யோசனையில் இருக்கிறீர்கள்?" என்று கூறியதும் தான் சிவநேசனுக்கு உலக உணர்வு வந்தது.

"ஒன்றுமில்லையம்மா" என்று மழுப்பினார்.

பின்பு இருவரும் "ஓவர் பிரிட்ஜ்"ஜைக் கடந்து பிளாட்பாரத்துக்கு வந்தனர்.

எலக்டிரிக் வண்டி வந்தது. இருவரும் இரண்டாம் வகுப்புப் பெட்டியை நோக்கி விரைந்தனர்.

ஒற்றைக் கதவு போட்ட வாசற்படியை அவர்கள் முற்றுகையிட்டபோது கதவு வழிவிட மறுத்துவிட்டது. கதவு முக்கால் வாசலை அடைத்துக்கொண்டு, உள்ளே செல்ல வழி விடாமல் எக்கச் சக்கமாக நின்றது.

சிவநேசன் பலங்கொண்ட மட்டும் தள்ளிப் பார்த்தார்; ஊஹூம்! கதவு அசைவதாகக் காணோம்! வைதேகி பரபரப்போடு நின்றுகொண்டிருந்தாள்.

வைதேகியை உள்ளே இருந்து கவனித்த ஓர் ஆடவனுக்கு ஆண்மைபிறந்தது. மூச்சைப் பிடித்தவாறு பலத்தையெல்லாம் பிரயோகித்துப் பார்த்தான். கதவு அசையவில்லை. உடனே அசடு வழிய, "ஓட்டைக் கதவு சார் இது! அந்தப் பக்கம் வாருங்கள் சார்" என மொழிந்தான் அவன்.

கார்டு விசிலும் ஊதிவிட்டார். வைதேகி பொறுமை இழந்தவளாகக் கையை வைத்து உள்ளே தள்ளியது தான் தாமதம், கதவு உள்ளே சென்று அவரோடு ஒட்டிக்கொண்டது.

இருவரும் உள்ளே ஏறி வாசற்படியை ஒட்டிய சீட்டிலே உட்கார்ந்து கொண்டனர். வண்டி புறப்பட்டதும் மறுபடியும் அந்தக் கதவு வெளியே ஓடி வந்து பழைய படி முக்கால் வாசலை அடைத்துக் கொண்டது.

சிவநேசன் அதை உள்ளிழுக்க என்ன முயன்றும் அது அசையவில்லை. அவருக்கு ஒரே வியப்பாக இருந்தது.

"என்னப்பா?" என்று வினவினாள் வைதேகி.

"ஒன்றுமில்லை, வைதேகி. இந்தக் கதவு உன் கைபட்டால் மட்டும் வழிவிடுகிறது. மற்றவருக்கு வழி விட மறுக்கிறது. அதனால் எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது! என்றார் சிவநேசன்

"என்னப்பா அது!"

"சீதைக்கும் சிவதனுசுக்கும் உள்ள உறவைப்போல, உனக்கும் இந்தக் கதவுக்கும் ஓர் உறவு இருக்கிறது!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் சிவநேசன்.

"ஓஹோ!"

"அந்த ஜனக மகாராஜன் தீர்மானித்த மாதிரி நானும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். மறுபடியும் சிக்கிக் கொண்டு நிற்குது பார் இந்தக் கதவு. இதை எந்த ஒரு வாலிபன் அசைத்து உள்ளே தள்ளி விடுகிறானோ அவனுக்கே உன்னைக் கல்யாணம் பண்ணிவைக்கப் போறேன்" என்றார்சிவநேசன் மகளைப் பார்த்தவாறு.

"போங்கப்பா!" என்று நாணம் மேலிட்டவளாய் தலை குனிந்தாள் வைதேகி.

ரெயில் சேத்துப்பட்டில் வந்து நின்றது. இந்தவாசலை நோக்கி ஓர் இளைஞன் ஓடி வந்தான். பார்வைக்கு நன்றாய் இருந்தான். படித்தவனாய் காட்டிற்று உடை

"இவன் மட்டும் இந்தக் கதவை உள்ளே தள்ளி விட்டானானால்............" என்று எண்ணமிட்டது சிவநேசன் உள்ளம்.

அவனோ, அதை முரட்டுத்தனமாக உலுக்கி விட்டுத் தோல்வியுடன் வேறு கம்பார்ட்மெண்டுக்குச் சென்று விட்டான். சிவநேசன் பெருமூச்சுவிட்டார்.

சிவதனுஸைத் தூக்க முடியாது தோற்றுப்போன பல தேசத்து ராஜாக்கள், சக்கரவர்த்திகள் எல்லோரையும் கண்டு ஜனகர் விட்ட பெருமூச்சு போல் அதுஇருந்தது.

"ஆனால் ஜனகனுக்கு ஒரு ராமன மருகனாகக் கிடைத்தான். எனக்குக் கிடைப்பானா?" என்று எண்ணமிட்டது சிவநேசனின் மனம்.

"அப்பா கோடம்பாக்கம் ஸ்டேஷன்" என்று கத்தினாள் வைதேகி.

"அதற்கென்ன? மாம்பலத்தில் தானே நாம் இறங்க வேண்டும்?"

"ஆமாம்" என்று கூறிவிட்டுப்பார்வையைப்பிளாட்பாரத்தில் ஒட்டினாள் வைதேகி.

ரயில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைய, மீசைக்காரர், குல்லாய் பேர்வழி, பேண்ட் ஆசாமி, சாயபு, பட்டை நாமம்—இப்படியாக எல்லோரும் முயன்றனர். ஒருவருக்கும் வளைந்து கொடுக்கவில்லை கதவு! ஏமாற்றத்தால் முணுமுணுத்துவிட்டு எல்லோரும் வேறு இடம்பிடிக்க ஓடினர்.

கார்டு விசில் ஊதினார். வண்டி கிளம்பும் சமயம். ஓர் இளைஞன் அவசர அவசரமாக ஓடி வந்து திறக்கமுயன்றான் கதவை. பிறகு எட்டிக் காலால் ஓர் உதை உதைத்தான்; கதவு பாதிதிறந்து வழிவிட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு உடம்பைக் கூனிக்குறுகி வளைத்து உள்ளே நுழைந்து விட்டான்.

நுழைந்த அவசரத்தில் வைதேகியின் மேல் விழப்போய் அவள் காலை மிதித்து விட்டான்.

"ஐயோ!" என்று கதறினாள் அவள்.

"எக்ஸ்கியூஸ் மீ பிளீஸ்" என்றான் இளைஞன்.

"டசின்மேட்டர்" என்று பதிலளித்தாள் வைதேகி.

சிவநேசனின் கண்கள் உள்ளே நுழைந்த இளைஞனையே வட்டமிட்டது. "ஏற்ற ஜோடி தான்" என்று எண்ணியது உள்ளம். ஆனால் கதவை முழுதும் திறந்து உள்ளே வரவில்லையே? பாதி திறந்துதானே உள்ளே நுழைந்தான்?" இராமன் கூட சிவதனுஸைத் தூக்கி நாண் ஏற்றினானா என்ன உடைத்துத்தானே போட்டான்" என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டார்.

இதற்குள் பத்து தடவை வைதேகியும் இளைஞனும் பார்வையை மாற்றிக்கொண்டனர்.

இதுவரை பேசாமல் இருந்த வைதேகி, கால் விரலில் இருந்து ஏதோ வலி உண்டாவதை உணர்ந்தாள். கால் விரலிலிருந்து ரத்தம் கசிந்துக் கொண்டிருந்தது.

"அப்பா ரத்தம்" என்றாள் தந்தையைப்பார்த்து.

"எப்படியம்மா வந்தது?" என்று பதறியபடி வினவினார் சிவநேசன்.

"அதோ இருக்கிறாரே அவர்தான் உள்ளே நுழைந்த வேகத்தில் என்காலைப் பதம் பார்த்துவிட்டுப் போய் விட்டார்" என்றாள்.

"ஓ ஐ ஆம் சாரி" என்றவனாய் அந்த இளைஞன், பையிலிருந்து, ஸ்டெதாஸ்கோப், பாண்டேஜ்துணி, பஞ்சு, டிஞ்சர், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் உருண்டை முதலியவற்றை எடுத்து வெளியே வைத்தான்.

உடனே வைதேகி கால் விரலைத்தூக்கிச் சீட்டில் வைத்துக் கொண்டாள். வாலிபன் வழிந்த இரத்தத்தைப் பஞ்சினால் துடைத்து விட்டு, டிஞ்சரைத்தடவி, வலி தெரியாமல் தேய்த்தான். பிறகு கொஞ்சம் பஞ்சை வைத்துத் தலைப்பாகை மாதிரி ஒரு கட்டுப் போட்டான்.

"தாங்ஸ்" என்றாள் வைதேகி காலைக்கீழே விட்டபடி.

"நோ மென்ஷன்" என்றவண்ணம் எல்லாவற்றையும் எடுத்துப் பைக்குள் திணித்துக் கொண்டான் அந்த இளைஞன்.

சிவநேசன் அவனைநோக்கி, "நீங்கள் டாக்டரா?" என்றார்.

"இல்லை, டாக்டருக்குப் படிக்கிறேன், கடைசி வருஷம் இது" என்றான் அவன்.

"ரொம்ப சந்தோஷம்! உங்கள் பெயர்?"

"ராமச்சந்திரன்"

"பலே! பலே! இது என் பெண், இண்டர்மீடியட் படிக்கிருள்" என்றார் சிவநேசன்.

',ஓ! எனக்குத் தெரியுமே!" என்றான் அவன்.

உடனே வைதேகி அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள். சமாளித்துக் கொண்டு, "என் தங்கையும் இண்டரில் வாசித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடன் பார்த்திருக்கிறேன்" என்றான் அவன்.

"உன் விலாஸம் என்ன?" என்றார் சிவநேசன் அந்த இளைஞனைப் பார்த்து.

"மாம்பலத்தில் கி. பி. ரோடு "அயோத்யா நிலையம்". எங்கப்பா பெயர் தசரதமூர்த்தி."

"என்ன? தசரதன் பிள்ளை ராமச்சந்திரனா? தசரதனை எனக்கு நல்லாத் தெரியுமே! அவனுக்கு உன் மாதிரி ஒரு பிள்ளை இருக்கான்னு எனக்குத் தெரியாதே! நல்லது மாம்பலத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. முடித்துக்கொண்டு உன் வீட்டிற்கு வருகிறேன்" என்றார் சிவநேசன்.

வைதேகியும் ராமச்சந்திரனும் ஒருவரை யொருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டனர்.

வண்டி மாம்பலத்தில் நின்றது. கதவோ அவர்களுக்கு இடைஞ்சல் ஒன்றும் தராமல் ஒழுங்காக வழி விட்டது!

முதலாவதாகப் பதிவு செய்யப்பட்ட ஓவியம்

காப்பிரைட் காரியாலயத்தில் முதலாவதாக உரிமை பதிவு செய்யப்பட்டுள்ள கலைப்பொருள், சென்னை கலைஞர் ஸ்ரீ சி. ஆர். கிருஷ்ணசுவாமி ஐயர் வரைந்திருக்கும் "சரவண பவா" என்னும் ஓவியமாகும்.

⁂ ⁂ ⁂

ஏற்றுமதி செய்யப்படுவதற்கான கைத்தறித் துணிகளின் தரத்தைக் குறிப்பிடவும், மேற்பார்வையிடுவதற்குமான திட்டமொன்றை அகில இந்தியக் கைத்தறி போர்ட் ஆரம்பித்திருக்கிறது. இதற்கான ஸ்தாபனமொன்று சென்னையிலும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,
Government Approved Fabricator & Contractor,
(Regd. No. S. 5.)
A. C. C. CEMENT STOCKIST
32, Sankari Road, Trichengode, (Salem Dt.)
(சென்னை அரசினர் உதவி பெற்றது)
உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.
T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

144852

ராசி பலன்

வி. வெங்கட்ராமன்

1—8—58 முதல் 15—8—58 வரையில்

மேஷம்

(அசுவனி பரணி கார்த்திகை $\frac{1}{4}$)

இந்த ராசியாதிபர்களின் நிலையை கவனிக்கும் நிலையில் ஆரம்ப இரண்டு தினம் மகிழ்ச்சிக்கும் சந்துஷ்டிக்கும் லாபகரமான நாளாகும். குரு பகவான் சப்தம ராசியில் ராகுவுடன் நின்றதில் சுபசிலவு, யாத்திரை, வெளியூர் சஞ்சாரம், சந்தான கர்ப்பலாபம், சீமந்தம், சுபமான மங்கள விரயங்கள் உண்டாகும். நண்பர்கள், மேலதிகாரிகள் மூலம் விகித அனுகூலங்கள் உண்டாகும். சில சமயங்கள் குடும்ப தொல்லை, வீண் பழி பர்வத்திற்கும் அபவாதமான கலகங்கள் உண்டாகும். நவக்கிரக வழிபாடு, தீபம் போட சாத்வீக அமைதி நிலவும். கூடியவரைபொறுமையும் அமைதியும் கையாள்வது உத்தமம், நல்ல நாட்கள்: 1, 2, 11, 12, 13 கெட்ட நாட்கள்: 4, 5, 6.

ரிஷபம்

(கார்த்திகை $\frac{3}{4}$ ரோகிணி மிருகஷீரிஷம் $\frac{1}{2}$)

இந்த ராசியாதிபர்களின் நிலை பார்க்கும் தருணம் 3-ம் வீட்டில் சஞ்சரிக்கும் சூரியன் சஞ்சாரம் சற்று கஷ்டங்கள் நீங்கி மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு அனுகூலமாக தோற்றுவிக்கிறது. சிலவினங்கள் கட்டுக்கு மீறியே ஓங்கி நிற்கும். சந்திரன் சஞ்சாரம் ஆரம்ப நான்கு தினம் வெற்றி, லாபகரம், பெரியோர் ஆதரவு, மேலான நண்பர்கள் மூலம் லிகித அனுகூலங்கள், பணம் வரவு இவைகள் உண்டாகும். குடும்பத்தில் சில சமயம் வீண் விரோதம், கோர்ட்டு விஷயங்கள், ஸ்தானம் பேதகம், இடம் கட்டிடம் மாறுதல் இவைகள் உண்டாகும். குரு பகவான் சத்ரு வீட்டில் இருப்பதில் உறவினர்கள் பகைமை உண்டாகும். பொறுமையை கடைப்பிடித்தல் நலம் தரும். நல்ல நாட்கள்: 1, 2, 3, 4, 5, கெட்ட நாட்கள்: 6, 7, 8.

மிதுனம்

(மிருகசீரிஷம் $\frac{1}{2}$ திருவாதிரை புனர்பூசம் $\frac{3}{4}$)

இந்த ராசிக்காரர்களின் நிலவரம் தற்காலம் எல்லாவிதமான கிரக நிலைமை பார்க்கும் ரீதியில் யோகவந்தன் பஞ்சமத்தில் சஞ்சரிக்கும் குரு, பலமாகவும், செவ்வாய் லாபத்திலும் இருப்பதினுல் சகல விதமான வழிகளிலும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் குடும்பம் சௌஜன்யமாக ஒற்றுமையாக நடக்க சாதகமான ரீதியில் அமைந்திருக்கிறது. மேலதிகாரிகள் ஆதரவும் விஸ்வாசமும் அவர்கள் நட்புக்கு தகுதியுடையவராகவும், ஜீவன உயர்வு, அதிகாரம் கீர்த்தி புகழ், பெரிய மனுஷாள் விஸ்வாசம் லாபகரமான உதவிகள், சன்மானம் அடைதல். இவைகள் திடும்பிரவேசமாக கிடைக்க சகலவிதமான கிரகங்களின் சஞ்சாரம் சாதகமான சூழ் நிலையில் அமைந்திருக்கிறது. பிரயாணம், யாத்திரை இவைகள் ஏற்படலாம். மகிழ்ச்சிக்கு சாதகமான நிலவரம் ஏதுவாக இருக்கிறது. நல்ல நாட்கள்: 5, 6, 7. 8. கெட்டநாட்கள்: 1, 10, 11.

கடகம்

(புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம் ஆயில்யம்)

இந்த ராசியாதிபர்களின் கிரக நிலை பார்க்கும் சமயம் அதிர்ஷ்ட வசத்திற்கும் சந்துருஷ்டிக்கும் கொஞ்சநாள் பொத்திருக்கவேண்டிய அவசியமிருக்கிறது, யோகவந்தன் செவ்வாய் பலத்தினுல் ஓர் அளவு சகல விதமான விவகாரங்கள் சகலமும் நல்ல முறையில் நடந்தே வரும். ஜன்மத்தில் சஞ்சரிக்கும் சூரியன் பலன் அடிக்கடி குடும்ப விஷயம் கவலை. கலவரம் பின்னணியில் பகைமை, தப்பான எண்ணங்கள் இவைகள் உண்டாகும். சனி குரு குஞ்சாரம் செய்யும் நிலைமை பார்க்கும் சமயம் கஷ்டமும் சுகமும் கலந்தே அனுபவிக்க நேரிடும். திசாபுத்திகள் பலமாக நடக்கும் ராசியாதிபர்களுக்கு எல்லாவிதமானகஷ்டங்கள் நிவர்த்தியாகி போகும். கூடியவரையில் நவக்கிரக சாந்தி; ஆலய வழிபாடு தீபம் போடுதல் நன்மையாக இருக்கும். வீண் வழியில் போக மனம் நாடும் ஓர் அளவு அமைதி பொறுமையை கையாண்டால் குடும்பத்தில் ஓர் அளவு திருப்திகரமாக வாழச் சூழ்நிலை உண்டாகும். நல்ல நாட்கள்: 6, 7, 8, 9, 10. கெட்ட நாட்கள்: 1, 2, 3.

சிம்மம்

(மகம் பூரம் உத்திரம் $\frac{1}{4}$)

இந்த ராசிக்காரர்கள் அதிர்ஷ்டவசம் கிரகநிலைகள் சகலமும் மகிழ்ச்சிக்கு சவுகரியத்திற்கு தகுதியுடையதாக சொல்ல ரீதியில்லை. சூரியன்,குரு, சனி இவர்களைகொண்டும் பார்த்தால் குடும்ப வெறுப்பும் விரக்தியும் வீண் பகைமை, கலகம் இவைகள் நேரிடாதபடிக்கு பொறுமையும் அமைதியை

யும் பழகுவதினல் எல்லா கஷ்ட நஷ்டங்கள் உண்டானலும் எதிலும் சுமுகமாக நடக்க சாதகமாக பலன் உண்டாகும். திசாபுத்திகள் பலமாக இருந்தால் சகல வழிகளிலும் தப்பி வாழ சவுகரியம் உண்டாகும். தவிர வீடு, வாகனம் இவைகள், பொன் ஆபரணம் இவைகளில் விரயம் செய்ய ஏற்படும். அதனல் நன்மையும் தீமையும் சமமாக அனுபவிக்க உண்டாகும். மேலதிகாரிகள் கோபம், விரோதம் வராமல் பார்த்துக்கொள்வது சுபம் நலம். நல்ல நாட்கள்: 10, 11, 12, 13. கெட்ட நாட்கள்: 3, 4, 5.

கன்னி

(உத்திரம் ¾ அஸ்தம் சித்திரை ½)

இந்த ராசியாதிபர்களின் அதிர்ஷ்ட தேவதைகள் யாவும் பரிபூரணமான ஆதரவில் தென்படுகின்றன. ஆயினும் அஷ்டமத்திலிருக்கும் செவ்வாய் பகவான் பலத்தினல் தாமதம், தயக்கம் முன்னேற்றத்திற்கு எதிர்ப்புகள் உண்டாகும். திசாபுத்தியும் பலமாக இருந்தால் எல்லாம் சவுகரியமாக உண்டாகும் தவிரவும் மேல் அதிகாரிகள், நண்பர்கள், சினேகிதர்கள் மூலம் ஆதரவு உதவி பலமாக கிடைக்க கிரக சூழ்நிலை அமைந்திருக்கிறது' தவிரவும் ஓர் அளவு அனமதிபொறுமையாக இருப்பதில் நன்மையுண்டாகும். குடும்ப ஒற்றுமை, வீடு, மனை கட்டிடம் கட்டல், பொன், பட்டு வஸ்திரம் வாங்க சவுகரியம் உண்டாகும். பெரியோர்கள் விஸ்வாசம் ஆதரவு பலமாக இருக்கிறது. வெளியூர் பிரயாணம், யாத்திரை இவை உண்டாகும். ந: 1,2,3,4. கெ. 6, 7,8.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾)

இந்த ராசிக்காரர்களின் அம்சம் பார்க்கிற சமயம் அதிர்ஷ்டவசத்திற்கு கொஞ்சநாள் பொறுத்திருக்க தேவை படுகிறது. சகலவிதமான வழிகளிலும் குடும்பத்தில் சுபமாக நல்ல பலன்கள் சொல்வதற்கே சூழ்நிலை கிரகங்கள் சரியில்லை. ஜன்மத்தில்,குரு, 2-ல் சனி, 7-ல் செவ்வாய் எல்லாம் அதிர்ஷ்ட தேவதைக்கு முரண்பாடான சமயமாக இருக்கிறது: கலகம், கோள், விரோதம், வீண் பொல்லாங்குகள் இவைகள் அடிக்கடி தோன்றி அமைதியாக இருக்க சரிவராது. கோர்ட் வழக்கும், வீண் வியாஜ்யம்ஸ்தானம் இடம் மாறிஇடம் விட்டு மாறுபட்டு வாழ்ந்தற்கு வரும். கூடிய வரையில் நவக்கிரக தீபம் போட்டு வழிபடுதல், பொறுமை அமைதியை கைப்பிடித்து சாத்வீகமாக

அழகுத் தெய்வம்

கதாசிரியர்: கே. ஜி. ராஜா

நிலவொளியில் அமர்ந்துநான்
நீண்ட நேரம்
நிகழ்காட்சி காண்பதிலே
நோக்கங் கொண்டேன்
உலவிடும் வெண்முகிலின்
விந்தைத் தோற்றம்
உதிர்ந்திட்ட ரவைகள்போல்
ஆங்கு ஆங்கு
பலவாறு கண்சிமிட்டும்
தாரகைகள்
பார்த்தென்னைப் பரிகாசம்
பண்ணும் காட்சி
நிலவிடும் அமைதியிடை
வெட்கம் சூழ
நிமிர்ந்த தலை குனியவே
செய்த தன்றே!
அப்போது மின் வெட்டு
தோன்றல் கண்டு
ஆகாயம் நோக்கினவே
எனது கண்கள்
தப்பாது 'பாரென்னை'
யென்ற ழைக்கும்
பாவைபாள் முகத்தோற்றம்
ஆங்கு கண்டேன்.
''ஒப்பில்லை மிக்கில்லை
அழகில் என்போல்
உலகமே என்வடிவம்
உணர்வாய்; உண்மை,
செப்பரிய சக்தி யெலாம்
நானே ஆவேன்
சிறப்பான அழகேதான்
எனது காட்சி!''
என்றியம்பி மறைந்தாளே
மாய மங்கை
எவ்வாறு நான்மறப்பேன்
அந்தக் கோலம்
இன்றும்தான் காணுகிறேன்
அழகுத் தெய்வம்
இதயமெனும் மனக்குகையில்
இடமே பெற்றுள்
நன்றிதுவே அவள் சக்தி
எனது வாழ்வு
நாடிடுதல் கூடுமென
நம்பி மேலும்
ஒன்றித்த மனநிலையில்
போற்றுகின்றேன்
உயர்வான நலமீய்ந்து
காப்பாள் அன்னை.

இருப்பது நல்லது. நல்ல நாட்கள்: 4, 5, 6, 7, 8 கெட்ட நாட்கள்: 9, 10, 11.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசியாதிபர்களின் நிலை ஓர் அளவு செவ்வாய் கேதுவுடன் பலமாக ஆட்சியாக விளங்கியதில் கொஞ்சம் கஷ்டம் குறைந்தபாடாக சொல்ல ஏதுவுண்டு. ஜன்மசனி 12-ல் குரு ராகு இவைகள் பார்த்தால் குடும்ப ஒற்றுமைக்கு முரணாகவும், வீண் கோர்ட் வழக்கு, மேலதிகாரிகள் கோபம், செய்கிற ஜீவனம் வழியில் பகைமை, பின்னணியில் கலகம் அடிக்கடி தோன்றி மறையும்: திசாபுத்தி பலமாக இருந்தால்ஓர் அளவு சவுகரியமாக வாழ்க்கைத்தரம் நடக்கும். எதிர்ப்பு இருந்தே வரும்: நவக்கிரக சாந்தி, ஆலய வழிபாடு, தீபம் போடல், யாத்திரை போதல் இவைகளினால் மன வருத்தம் கஷ்டம், ரோகம் ரொணம், சத்ரு பகை கொஞ்சம் குறைந்து நிற்கும். பொறுமை அமைதியுடன் சாத்வீகமாக இருப்பதினால் எல்லாம் கூடுமானவரையில் சவுஜன்யமாக வாழ்வதற்கு ஏதுவாகும். நல்ல நாட்கள்: 4, 5, 6, 7. கெட்ட நாட்கள்: 8, 9, 10.

தனுசு

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசியாதிபர்களின் நிலை லாபஸ்தானத்தில் குரு, ராகு பலமாக இருப்பதினால் எல்லாவித அம்சங்களிலும் முன்னேற்றத்திற்கு சாதகமான காலமாக சொல்ல வழியுண்டு. சனி 12-ம் வீட்டிலிருப்பதினால் ஓர் அளவு சிலசமயம் குடும்ப ஒற்றுமையில் ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்து வேற்றுமைகள், மனம் சந்தேகம் தோன்ற அதனால் கஷ்டமும் துக்கமும் தோன்றி நிவர்த்தியாகும். மேலதிகாரிகள் நண்பர்கள் மூலம் உதவி நன்மை சவுகரியங்கள் அடைய சாதகமாக வியாழமூர்த்தி விளங்குகிறார். திசாபுத்திகள் பலமாக நடக்கக்கூடியவர்கள் வீடு, வாகனம், கட்டிடம், வீடு ரிப்பேர் செய்யவும், புதிய வீடு, கார், இடம் புதிய வீட்டு வாசம் செய்யவும் சமயம் சந்தர்ப்பம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் செய்ய வசதியுண்டாகும். நல்ல நாட்கள்: 9, 10, 11, 12. கெட்ட நாட்கள்: 13, 14, 15.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம் 1 அவிட்டம் ½)

இந்த ராசினாதர்கள் அதிர்ஷ்ட அம்சம் சனி 11-ம் வீட்டிலிருப்பதினால் சகலவிதமான வழிகளில் முன்னேற்றம் முன்னுக்கு வருவதற்கு பெரிய மனுஷாள் ஆதரவு உண்டாகும். ஜீவனம் தொழில் செய்யும் ராசிக்காரர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு, லிகிதானுகூலம், ஜீவன வழியில் உயர்வு, வருமானம் இவைகள் சவுகரியமாக அனுகூலமாக சொல்ல சாதகமாக இருக்கிறது. தவிரவும் செவ்வாய், சூரியன், குரு இவர்கள் சஞ்சாரம் கஷ்டம், விரோதம் அடிக்கடி வந்து உடனுக்குடன் நிவர்த்தியாகும். சனி பலமில்லாவிட்டால் சகல வழியிலும் சந்துஷ்டிக்கே சாதகமாக சொல்ல சரிவருது. திசாபுத்திகள் பலமாக இருப்பவர்கள் எல்லாவழியிலும் சவுகரியம் சந்தோஷமாகவே வாழ்க்கைத்தரம் சுகமாக நடந்து வரும். பொறுமையையும் அமைதியையும் பழகினால் நன்மையாகயிருக்கும். நல்ல நாட்கள்: 11, 12, 13: கெட்ட நாட்கள்: 6, 7, 8.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் 1 பூரட்டாதி ¾)

ராசியாதிபர் நிலைமை சவுகரியங்கள் பார்க்கிற சமயம் சூரியன், செவ்வாய், வியாழன், சனி யாவரும் பலமாக சஞ்சாரம் செய்வதில் ஜீவனம் தொழில் வர்த்தகம் செய்யும் நேயர்களுக்கு எல்லா வழியிலும் முற்போக்கான காலமாக சொல்ல ஏதுவாக யிருக்கிறது. திசாபுத்திகள் விரோதமாக நடக்கும் ராசிக்காரர்கட்கு சகல வழியிலும் திருப்தியற்ற பலனாகவே தான் நடக்கும். சுபமாக யோகமாக திசாபுத்திகள் நடக்கும் ராசியாதிபர்களுக்கு வீடு, வாகனம் கட்டிடம் கட்ட வாங்க சரிவரும். அதிக வருமானம் வருவதற்கு கிரகநிலை அமைந்திருக்கிறது. பிரயாயாணம் செய்யவரும் மேலதிகாரிகள் மூலம் லிகித அனுகூலம், ஜீவன உயர்வு, பொன், பூஷணம் வாங்க சுபமான வழியில் செலவு செய்ய நேரிடும். அதிர்ஷ்ட தேவதைகள் பலமாக சூழ்ந்திருக்கிறது. சுப பலனாகவே நடக்கும் புதியவழியில் சிநேகிதம், புதிய ஆடைகள் வாங்க வரும். நல்ல நாட்கள்: 6, 7, 8. கெட்ட நாட்கள்: 10, 11, 12.

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசியாதிபர்கள் அதிர்ஷ்டம் சவுகரியம் அடைய கொஞ்ச நாள பொறுத்திருக்க தேவைபடுகிறது. ராசியாதிபன் குரு சஞ்சரிப்பும் நிலை சரி இல்லை. எல்லா கிரக நிலையும் தற்சமயம் கொஞ்சம் சரி இல்லாமல்படியே இருக்கிறது. திசாபுத்திகள் பலமாக இருந்தால் எல்லாவிதமான கஷ்டங்களும் நிவர்த்திக்கு சாதகமாக இருக்கும். கூடு

(தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க)

திரை உலகம்

அன்னையின் ஆணை

நான் பெற்ற செல்வத்தை நாட்டுக்கு நல்கி நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்ட பாரகன் பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பு அன்னையின் ஆணை.

திரைக்கதை அமைப்பு திரு. நாராயண மூர்த்தியின் பொறுப்பு. மேலை நாட்டுக் கதை ஒன்றின் தழுவல் 'அன்னையின் ஆணை' யின் கதை என்று கேள்வி.

அன்னையின் ஆணை ஒன்றல்ல; இரண்டு. ஒன்று பரோபகாரம் என்பவரைப் பழி வாங்கவேண்டும்; இரண்டாவது அதுவரைக்கும் எந்த இன்பத்திலும் மனம் ஈடுபடக் கூடாது. இரண்டையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப் பாடுபடுகிறார் சிவாஜி கணேசன். இக்கட்டான இந்தப் பாத்திரத்தில் கணேசன் உணர்ச்சிகளை வெகு அழகாக சித்தரித்துக் காட்டி இருக்கிறார். நிமிடத்திற்கு நிமிடம் அவருடைய முக பாவங்கள் மாறுவதைப் பார்க்கும் போது மெய்சிலிர்க்கிறது. 'அன்னையின் ஆணை' கணேசனை உலகப் புகழ் பெற்ற நடிகர்களில் ஒருவராக மாற்றிவிட்டது என்று துணிந்து கூறலாம்.

பிரேமாவாக சாவித்திரி வருகிறார். போற்றத்தக்க நடிப்பு. பண்டரிபாய் நடிப்பில் பழுது சொல்ல முடியுமா? ராஜம், முத்துலட்சுமி ஆகியோரும் நடிக்கின்றனர்.

ராஜம் நடிப்பு ஒரு தனிச் சிறப்பு. நம்பியார் வழக்கம் போல் தான். ரங்காராவின் நடிப்பில் புதுமை இல்லை. நடிப்புக்குப் பேச்சு முக்கியமில்லை என்பதற்கு இப்படத்தில் முத்துலட்சுமியின் நடிப்பு சான்று. கல்யாணக் காட்சியில் மட்டுமே வந்து சில வார்த்தைகளை மட்டுமே பேசினாலும் அதன் மூலம் தனக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறது என்பதைக் காட்டி விட்டார் கதிரொளி. ஆனால் அவருடைய பெயரைப் படத்தில் போடாதது வருந்தத் தக்கது.

'முரசொலி' மாறனின் வசனத்தில் புதுமை ஏதும் காணோம். அங்கம், தங்கம், சிங்கம் போன்ற மோனைகள் படத்தின் ஓட்டத்துக்கு ஒரு தடை!

பரோபகாரத்தை தன் வீட்டுக்கு அழைத்து வந்து தன் தாய் தந்தையர் படத்தைக் காண்பித்து மறைமுகமாகச் சூடும் கொடுக்கும் காட்சி டைரக்டரின் திறமைக்கு உறைகல். ஆனால் பரோபகாரத்தை, கணேஷ் தன் வீட்டிலேயே சிறை வைப்பதும், பின்பு பாலு பிரேமாவையும் பரோபகாரத்தையும் கட்டிப்போட்டுத் துன்புறுத்துவதும் சினிமாவில் மட்டுமே வரக்கூடிய சம்பவங்கள்!

மலைக்கள்ளனுக்குப் பிறகு சுப்பையா நாயுடுவின் இனிய இசையை இதில் கேட்க முடிகிறது. 'அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை' என்ற பாட்டுக்கு மெட்டு அமைப்பு அருமை. சுசீலா, சௌந்தரராஜன், ஜெயராமன் போன்றோர் பின்னணி பாடி இருக்கின்றனர்.

விஜயத்தின் படப்பிடிப்பு படத்தின் வெற்றிக்கு ஒரு அடிப்படை; கண்ணுக்கு குளிர்ச்சி அளிக்கிறது.

ஆபாசம் எதுவுமின்றி தரை டிக்கட் முதல் 'பால்கனி' டிக்கட் வரை அனைவரும் ரசிக்கக்கூடிய படம், 'அன்னையின் ஆணை'. நடிகர் திலகத்தின் நடிப்புக்காக ஒரு முறையல்ல; பல தடவை பார்க்கலாம் 'அன்னையின் ஆணை' யை.

சோ. க.

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

மானவரையில் நவக்கிரக சாந்தி வழிபடுதல், தீபம் போடல் இவைகள் செய்வதில் கொஞ்சம் கஷ்டம் குறையும். பொறுமை அமைதி பழகி வருதல் நன்மைக்கு சாதகமாக விளங்கும். மேலதிகாரிகள் வீண்பழி விரோதம் பகைமை உண்டாகுவதற்கு ஓர் அளவு ஜாக்கிரதையாக நடந்துகொள்வது உசிதமாக இருக்கும். கருத்து மாறுபாடான தப்பான எண்ணங்கள் உண்டாகும். மன உறுதிப்பாடான வழியில் சாத்வீகமாக நடக்க சவுகரியம் உண்டாகும். நல்லநாட்கள்: 9, 10, 11. கெட்ட நாட்கள்: 12, 13, 14,

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press 30, Edapalayam Street, Madras-3.